22nd October 2023

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 02 | பக்கங்கள் - 13 | editor.uthayam@gmail



# உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் இஸ்ரேல்

## சஹ்ரான் விலைக்கு வாங்கப்பட்டஇஸ்ரேல் முகவர்

அரசியல் நோக்கம் ஒன்றை அடைந்து கொள்வதற்காக 03ம் பார்க்க >>>

## பாராளுமன்றில் ஹக்கீம் திடுக்கிடும் தகவல்



## நெதன்யாகுவுக்கு எதிராக வெடித்தது மக்கள் புரட்சி

இஸ்ரேல் மீது ஹமாஸ் போராளிகள் நடத்திய தாக்குதல் தொடர்பில் இஸ்ரேல் மக்களிடம் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் 80 சதவீதம் பேர் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை எதிராக திரும்பியிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில், போருக்கு மத்தியில் குறித்து இஸ்ரேல் மக்களிடம் கருத்துக்கணிப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

மேலும், ஹமாஸ் 03ம் பார்க்க >>>

## காஸா மீதான தாக்குதல்கள் பிராந்தியத்திலும் பரவும் ஆபத்து

இஸ்ரேல் லெபனான் மீது தாக்குதலை அதிகரித்துள்ள நிலையில் ஈராக்கிலுள்ள அமெரிக்க இராணுவ 02ம் பார்க்க >>>

## டயானா கமகே மீதான தாக்குதல்



### சபாநாயகர் நியமித்த குழு புதனன்று கூடுகிறது

சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் 03ம் பார்க்க >>>

## முஸ்லிம்களுக்கு தனியான ஊடகங்கள் அவசியம்

### சமூகம் இதுபற்றி சிந்திக்க வேண்டும்

**உதயம் நிகழ்வில் ஜனாதிபதி சட்டத்தரணி சுஹைர் வேண்டுகோள்**



ஊடகம் என்கின்ற சக்தி இன்று உலகில் மிகவும் பாரிய சக்திவாய்ந்தது ஆனால் ஊடகம் என்பதையும் அதன் சக்தியையும் அறியாத ஒரு 02ம் பார்க்க >>>

## அதிகாரப் பரவலாக்கல் மூலம் அரசியல் ரீதியான மாற்றம்



### 2024 இல் தேர்தல் ஆண்டு

**ஐ.தே.க. மாநாட்டில் ரணில் கருத்து**

(எம்.ஏ.எம்.நிலாம்)

உயர் மட்டத்திலிருந்து அதிகாரப் பரவலாக்களைக் கொண்டு வந்து அரசியல் மாற்றத்தைக் கொண்டு வரவிருப்பதாகவும் ஸ்மார்ட் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டுமெனவும் 02ம் பார்க்க >>>




**முஸ்லிம்களுக்கு....**

**முன்பக்கத் தொடர்ச்சி**

சமூகம் இருக்குமென்றால் அது எமது சமுகமாகும். இன்று எம் மத்தியில் உதயமாகும் உதயம் பத்திரிகை ஆரம்பிப்பதில் நாம் மிகவும் சந்தோசமடைகின்றோம். அத்தோடு டிஜிட்டல் மயமாக்கலில் வெளியிடுவது மிக மிக அவசியமாகும். ஆனால் இந்த நாட்டில் வேறு சமூகத்திற்கு மீடியாக்கல் பத்திரிகைகள் நிறையவே இருக்கின்றன. தமிழ் மக்களின் கட்டுப்பாட்டில் நிறைய ஊடகங்கள் இருக்கின்றன. மலைய மக்களுக்கும் ஊடகம் தற்பொழுது வேண்டிய அளவில் இருக்கின்றன. ஆனால் இந்த நாட்டில் வாழும் முஸ்லிம்களுக்கு எவ்வித எலக்ரோனிக் அல்லது பத்திரிகை போன்ற ஊடகங்கள் எம் மத்தியில் இல்லை .

எமக்கு பத்திரிகைகள் அவசியமாகும்.. அதில் தான் உண்மைச் செய்திகள் வெளிவரும். டிஜிட்டல் முறையில் எவரும் அறியாத உண்மையற்ற செய்திகளை நினைத்தவாறு யாறும் எழுதி வெளியிட முடியும். அச்சு ஊடகமொன்று எமக்கு அவசியமாகும்.

பலஸ்தீன் –இஸ்ரேல் யுத்தத்தினைக் கூட வெளிநாட்டு ஊடகம் பலஸ்தீனத்தினையும் அம்மக்களது 75 வருட கால யுத்தம் அவலம் துயரங்கள் உண்மைகளை மறைக்கப்பட்டு சியோனிச ஊடகத்தில் எமக்கு எதிராகத்தான் செய்திகள் வெளிவருகின்றன. எமது நாட்டில் வாழும் ஏனைய சமூகங்களும் ஹமாஸ் என்பது பயங்கரவாதம். நாமே முதன் முதலில் இஸ்ரேவேலரை தாக்கியது என செய்திகள் வெளிவருகின்றன. மூன்று தசாப்தங்களுக்கு முன் நானும் என். எம். அமீன், காலம் சென்ற எம்.பி.எம். அஸ்கர் போன்றோர் . புதுமைக்குரல் , எழுச்சிக் குரல் என பல பத்திரிகைகள் கடந்த காலங்களில் வெளியிட்டுள்ளோம் புறக்கோட்டையில் கடை கடையாகச் சென்று விளம்பரம் சேகரிக்கச் சென்றுள்ளோம். ...ஆனால் தொடர்ந்து அவைகளை எடுத்துச் செல்ல முடியாமல் உள்ளது. . எங்களது சமூகத்தில் உள்ள முஸ்லிம் பிரதேசங்களில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகள் சிங்கள மொழி மூலம் எழுதக் கூடிய முஸ்லிம் ஊடகவியலாளர்கள் தேவை.... ஆனால் சிங்களப் பத்திரிகையில் முஸ்லிம்களது செய்திகள் பிழையான செய்திகளை சிங்கள மக்களுக்கு கொண்டு செல்வதனை நாம் அவதானிக்கின்றோம்....

உதயத்தின் முதல் பிரதி சிறந்த பேப்பரில் அச்சிடப்பட்டுள்ளது...சகல சமூகங்களும் ஒன்று சேர்ந்து இந்த நாட்டில் உள்ள அதிகாரமளிக்கப்பட்ட ஜனாதிபதிமுறைமை மாற்றப்படல் வேண்டும்..எனச் பேசப்படுகின்றது. .இருக்கக் கூடிய அரசியல்யாப்பு மாற்றப்படுவதற்கு நாம் இடமளிக்க முடியாது. ஆகக் குறைந்தது எமது அடிப்பறை உரிமைக்காகவது நீதிமன்றம் செல்லக்கூடிய வசதிகள் வாய்ப்புக்கள் இந்த அரசியலமைப்பில் உள்ளது.

ஊடகம் என்பது சுதந்திரமாக இருத்தல் வேண்டும். நமது மக்கள் ,நாடு சிறந்த செய்திகள் சென்றடைய வேண்டும். அவர்களை உங்களது செய்திகள் ஊடக தெளிவுபடுத்தி அவர்களது மனநிலை கல்விநிலைக்கு கொண்டு செல்வதற்கு கட்டாயம் ஊடகம் அவசியம்.....

இன்று பொருளாதாரத்தில் மிகவும் கஸ்டமான நிலையில் எமது நாடு உள்ளது.. நமது நாட்டில் அன்றாடம் மூவேலையும் சாடப்பிடக் கூட வசதியில்லாமல் சில வறிய மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். முக்கியமாக எமது ஊடகத் தொழில் செய்யும் பெரும்பாலான ஊடகவியலாளர்கள் பெரிதும் கஸ்டத்தில் வாழ்கின்றார்கள்.இவ்வாறான ஊடகவியலாளர்களுக்கு நாம் உதவி செய்தல் வேண்டும். அவர்கள் செய்யும் மனிதபிமான ஊடகத் தொழில் செய்பவர்களுக்கு நாம் உதவ வேண்டும்..இத்துறையை விட்டு அவர்கள் விலகினால் எம்மத்தியில் உள்ள ஒரு சில ஊடகவியலாளர்களும் இந்த நாட்டில் இல்லாமல் போகிவிடுவார்கள்.. .. இந்த நாட்டில் வாழும் எவரும் ஊடகவியலாளர்களை அடையாள படுத்தி உதவுவதில்லை..... அவர்கள் வாழ்க்கை முறையைக் கொண்டு செல்வதற்கு மிகவும் கஸ்டமான நிலையில் உள்ளதை நாம் த்னிப்பட்ட முறையில் அவதானித்துள்ளேன்....

பலஸ்தீனத்தின் யுத்தம் ஓர் நீண்ட கால யுத்தம். அங்கு உள்ள அல் அக்சா பாதிக்கப்பட்டால் இங்குள்ள மக்களும் உணர்ச்சிபூர்வமாக முற்படுவார்கள்..என ஜனாதிபதி சட்டத்தரனி எம்.எம். சுகையிர் அங்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

**அதிகாரப்....**

**முன்பக்கத் தொடர்ச்சி**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று அழைப்பு விடுத்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட சம்மேளனக் கூட்டத்தில் பேசுகையிலேயே கட்சித் தலைவர் என்ற அடிப்படையில் ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்கில் நேற்று சனியன்று மாலை இம்மாநாடு நடைபெற்றது.

நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்தியதன் பின்னர் அரசியலமைப்பின் பிரகாரம் அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் எனவும், அதன் பின்னர் பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டு, 2025 ஆம் ஆண்டின் முதற் காலாண்டில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

”ஸ்மார்ட் நாடு – 2048ஐ வெல்வோம்” என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மாநாட்டில், திருத்தப்பட்ட கட்சியின் புதிய யாப்பு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

அதிகாரப் பரவலாக்களை அரச மட்டத்திலிருந்து முன்னெடுக்க போவதாகவும் அரசியலில் உள்ள அரசிலிலுள்ள அனைவரும் ஆளும் தரப்பு எதிர்த் தரப்பு என்றில்லாமல் அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் திட்டத்தை உடனடியாக அமுல்படுத்தப் போவதாகவும் அதிகாரங்கள் ஒரே இடத்தில் குவிக்கப்பட்டால் தேசத்தை சரியான முறைப்படி கட்டியெழுப்ப முடியாது எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் ஒழுக்க விழுமியத்தைப் பேணும் பொருட்டு முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய தயாரித்திருக்கும் ஒழுக்க விழுமியச் சட்டக் கோவையை திங்களன்று தானே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் போவதாகவும் நாட்டு மக்களுக்கு பாராளுமன்றம் முன்னுதாரணமாக இருக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

ஊழல் மோசடிகளை ஒழிப்பதற்கு சர்வதேச நாணய நிதியுடன் இணைந்து விசேட திட்டத்தை முன்வைக்கவிருப்பதாகவும் நாடு வீழ்ச்சி கண்டபோது யாரும் பொறுப்பேற்க மறுத்த தேசத்தை தான் பொறுப்பேற்றதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி எப்போதும் நாட்டை மீட்டெடுத்த கட்சி எனவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் ஜனாதிபதி என்ற அடிப்படையில் கட்சி அரசியலுக்கு அப்பால் என்று முழு நாட்டையும் மக்களையும் இணைத்து முன்னேற்றப் பாதையில் பயணிப்பதே தனது இலட்சியம் எனவும் ஐக்கிய தேசிய கட்சி தோல்விகளைக் கண்டு பயந்தோடும் கட்சியல்ல் சவால்களுக்கு முகம் கொடுத்து நாட்டைப் பாதுகாக்கும் ஒரு தேசிய கட்சியாகும். கட்சியை விட தேசத்தைக் காப்பாற்றுவதற்கே நான் முன்னுரிமை கொடுப்பேன் எனவும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இங்கு தெரிவித்தார்.

**காஸா....**

**முன்பக்கத் தொடர்ச்சி**

முகாம் மீளவும் தாக்குதளுக்கு உள்ளாகி உள்ளது ./ஹதிகள் யெமனில் இருந்து அமெரிக்க கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளமையும்.மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து தமது பிரஜைகளை மிக ,மிக அவசரமாக வெளியேறுமாறு இஸ்ரேலிய பாதுகாப்பு கவுன்சில் அவசர அறிவிப்பை விடுத்துள்ளது.

இன்று எகிப்தில் நடைபெற்ற அவசர மாநாட்டில் பல கருத்துள்ள முஸ்லிம் நாடுகள் காஸாவில் ஏற்பட்டுள்ள நிலையை முகாமை செய்வது தொடர்பில் நீண்ட கலந்துரையாடல்களை மேற்கொண்டனர்.


சவுதி காஸா மீதான இராணுவ நடவடிக்கை உடன் நிறுத்த வேண்டும் என சவுதி வேண்டியுள்ளதுடன் ,துருக்கி இந்த நிலை தொடர அனுமதிக்க மாட்டோம் என அறிவித்துள்ளது. துருக்கிய ஜனாதிபதி எர்தோவன் நேட்டோ செயலாளர் நாயகத்துடன் தொடர்பு கொண்டு அமெரிக்க நடவடிக்கைகள் தொடர்பில் தமது அதிருப்தியை தெரிவித்துள்ளதுடன் ,காஸா மீதான தாக்குதலை நிறுத்த தலையிடுமாறு வேண்டி உள்ளார்.

ரஷ்யா தனது அணு ஆயுதத்தை பயன் ஏவு நிலையில் வைத்துள்ளது.

இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் ஹிஸ்புல்லா இன்னமும் நேரடி மோதலில் ஈடுபடவில்லை என்றும் அவ்வாறு நடந்தால் அதன் விளைவுகள் மிகப் பயங்கரமாக இருக்கும் என எச்சரிக்கை விடுத்துள ளது.

லெபனானில். மோதல் உக்கிரமடைவதி என்பது ஈரானை தானாக போரில் சம்பந்தப்படுத்துவதாகும .துருக்கியும் எந்த நேரமும் நேரடி இராணுவ மோதலில் சம பந்தப்படலாம் தெளிவாக இந்த யுத்தம் பிராந்திய யுத்தமாக மாறுகிறது.



# இலங்கையின் இருபத்திரண்டு மாவட்ட ஜனாஸா அமைப்புகள் தேசிய அமைப்பில் இயங்குவதற்கான கலந்துரையாடல்



(சியாத் எம்.இஸ்மாயில் )

இலங்கையின் பல்வேறு மாவட்டங்களிலும் உற்சாகமாக இயங்கிவரும் ஜனாஸா மற்றும் அவசர சேவைகளை நடாத்தி வரும் ஜனாசா நலன்புரி அமைப்புகளில் தொண்டாற்றிவரும் முக்கியஸ்தர்களின் ஒன்று கூட்டி ஒரு தேசிய அமைப்பில் இயங்குகுவதற்கான முன்னோடிக்கூட்டமொன்று பொலநறுவை கதுருவல முஸ்லிம் மத்திய கல்லூரி மணடபத்தில் கடந்த (14) மிகச்சிறப்பாக நடைபெற்றது.

பொலநறுவை மாவட்ட ஜனாஸ ா அமைப்பின் ஸ்தாபகரும் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவையின் பொலநறுவ மாவட்ட பணிப்பாளருமான ஓய்வு பெற்ற ஆசிரியர் எம்.எஸ். எம் ஏ. காதர் எடுத்துக்கொண்ட நீண்டகால முயற்சியின் பயனாக ஒழுங்குசெய்யப்பட்ட இந்நிகழ்வுக்கு இலங்கையின் இருபத்திரண்டு மாவட்டங்களைச் சேர்ந்த ஜனாஸா அமைப்புகளின் தலைவர், செயலாளர் மற்றும் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

ஒழுங்கமைப்பாளர் காதர் வரவேற்புரை, அறிமுக உரை மற்றும் ஒன்று கூடலின் நோக்கம் பற்றி விளக்கினார் . தூர இடங்களிலுள்ள ஜனாஸாக்களை விரைவாக கொண்டுசெல்வது மற்றும் அவசர அனர்த்த சேவை பற்றிய தமது ஒழுங்கு முறைமை பற்றியும் விளக்கினார். அண்மையில் நிகழ்ந்த மனம்பிட்டி பாலத்தில் நிகழ்த்த அகோர விபத்தின்போது இலங்கையின் பல்வேறு ஜனாஸா அமைப்புகள் தமது ஜனாசா சேவை வாகனங்களோடு வருகை தந்து இன மத வேறுபாடின்றி சகல மரணித்தவர்களையும் அவர்களது இல்லங்களுக்கு கொண்டு சென்று ஒப்படைத்தமை ஒரு மகத்தான பணியாகும் என்று குறப்பிட்ட அவர் இந்த பணியில் பங்குகொண்ட அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியையும் பாராட்டையும் தெரிவித்தார்..

இதனையடுத்து மாவட்ட ரீதியாக ஜனாசா அமைப்புகளின் அறிமுகம் நடைபெற்றது. ஜனாஸ ா அமைப்புகளின் பிரதிநிதிகள் தமது அமைப்புகள் ஆற்றிவரும் சேவைகள் பற்றி உரையாற்றிய தோடு, தமது அமைப்புகளின் எதிர்கால திட்டங்கள் பற்றியும் விரிவாக விளக்கினர். அனர்த்தங்களின் போது வறுமைக்கோட்டிட்டில்வாழும் மக்களுக்கு தாம் எவ்வாறு உதவி வருவதாக வும் குறிப்பிட்டனர்.

இந்நிகழ்வில் பாலமுனை ஜனாஸா நலன்புரி அமைப்பின் தலைவரும் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரியுமான டாக்டர் எஸ். எம் ரிபாஸ்டீன் ஜனாசாக்களை அரச ஆஸ்பதிரிகளிலிருந்து பெற்றுக்கொள்வதிலுள்ள சட்டங்கள்பற்றி இங்கு விரிவாக விளக்கினார். எம்.ஹரூன் ஓட்டமாவடி ஜனாஸா நலன்புரி அமைப்பின் தலைவர் மௌலவி ஹரூன் சஹ்தி கேகாலை மாவட்ட அமைப்பின் தலைவர் அமீனுல்லா ஜே.பி மற்றும் பலரும் இங்கு உரையாற்றினர்.

இதனையடுத்து ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒவ்வொரு பிரதிநிதிகள் தெரிவானார்கள். இவர்கள் தமது மாவட்டத்திலுள்ள அமைப்புகளை த்கூட்டி நிலைமைகளை விளக்கி ஒரு குழுவைத்தெரிந்து அடுத்து நடைபெறவுள்ள கூட்டத்தில் சமர்ப்பிப்பர்.

இறுதியாக அக்கரைபற்று அமைப்பினர்களான அல்ஹாஜ் எம் ஜ"னூன், தக்வா' பள்ளி பிரதம நம்பிக்கையாளர் எம்,எம். ரியாத் ஆகியோர்களால் நிகழ்வின் ஏற்பாட்டாளர் பொலநறுவ அமைப்பின் தலைவர் காதர் இப்பணியில் ஆற்றிய சேவையைபாராட்டி பொன்னாடைபோர்த்தி கௌவரவிக்கப்பட்டார்.

---

**சஹ்ரான்....**

**முன்பக்கத் தொடர்ச்சி**

இலங்கையில் நடந்த உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலின் பின்னணியில் இஸ்ரேல் இருந்துள்ளது என்ற திடுக்கிடும் தகவலை கத்தோலிக்கப் பேராயரையும், 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி நடந்த பிரஸ்தாப குண்டுத் தாக்குதல் பற்றி ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கையையும் சுட்டிக்காட்டி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பலஸ்தீன யுத்த நிலைமையை தொடர்பான ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதம் பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பொழுது, அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார் .

அங்கு உரையாற்றுகையில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் மேலும் கூறியதாவது,

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் இந்நாட்டின் கத்தோலிக்க சமய தலைவரான பேராயரை நாங்கள் சென்று சந்தித்தோம். அமைச்சர்களான பௌஸி, கபீர் ஹாஷிம் ரிஷாட் பதியுத்தீன் ஆகியோரும் என்னுடன் வந்திருந்தனர். அப்பொழுது நாங்கள் எங்களது கவலையை தெரிவித்த பொழுது பேராயர், ஏன் நீங்கள் இதற்காக கவலைப்படுகிறீர்கள்? இதற்கு இந்நாட்டு முஸ்லிம்கள் பொறுப்பல்ல. இது மத்திய கிழக்கு நாடொன்றின் வேலையாகும். இஸ்ரேல் இதன் பின்னணியில் இருந்துள்ளதாக சந்தேகிப்பதாகவும் கூறினார்.

இந்த நாட்டில் முஸ்லிம்கள் மீது அப்பொழுது தாக்குதல் மேற்கொள்ளப்படாமல் தடுத்ததற்காக நாங்கள் அவருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

இன்றைய(20) டெய்லி நியூஸ் பத்திரிகையில் "காஸா யுத்தம் இஸ்ரவேல் பலஸ்தீன் மோதல் "என்ற தலைப்பில் பேராசிரியர் எனக் கூறிக்கொள்ளும் ரொஹான் குணரத்ன என்பவர் ஒரு கட்டுரையை எழுதியுள்ளார் .அதன் தலைப்பு அவ்வாறு பொதுவாக இருந்த போதிலும், அதன் உள்ளடக்கம் நடுநிலையானதாக இல்லை .அவர் பேராசிரியர் என்று கூறிக் கொள்வது தொடர்பில் பாராளுமன்ற குழு அறை ஒன்றில் நான் அவருடன் நேரடியாகவே முரண்பட்டுள்ளேன். அது வேறு விஷயம். முன்னர் ஒருபோது அவர் சஹ்ரானை எவ்வாறு கையாள்வது என்பது பற்றி எங்களுக்கு புத்திமதி சொல்ல வந்தார். அவருடைய கட்டுரையில் எங்களுக்கு உடன்பாடு இல்லை. அவர் ஒரு பக்க சார்பாகவே நடந்து கொள்கிறார் இதற்கு ஐ .எஸ் தான் பொறுப்பு என்ற அவர து தவறான நிலைப்பாட்டை நிரூபிப்பதற்காக அவர் அபாண்டங்களைக் கூறி வருகிறார்.

ரொஹான் குணரத்ன அவரது கட்டுரையில் இஸ்ரேலின் மொஸாட் உளவுத் துறை, நிபுணத்துவம்,அதன் பரந்துபட்ட வலையமைப்பு என்பன பற்றியெல்லாம் சிலாகித்து எழுதியுள்ளார்.

2019 ஏப்ரல் 21 ஆம் திகதி நடந்த குண்டு தாக்கல் பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட ஆணை குழுவின் அறிக்கை இதோ இருக்கிறது .நீதியரசர் ஜனக் டீ சில்வா தலைமையிலான அந்த ஆணைக்குழுவின் அறிக்கையில் அதன் 106ஆம் பக்கத்தில் காணப்படுவதாவது,

சஹ்ரான் ஐ.எஸ் ஆதரவாளர்கள் பற்றி விழிப்பாக இருந்ததாகத் தோன்றுகிறது. உண்மையில் பார்க்கப்போனால், அவர்கள் ஐ.எஸ்ஸோடு சம்பந்தப்பட்டவர்கள் அல்லர் வேறு உளவாளிகள்.

2018 அக்டோபர் 10ஆம் தேதி சஹ்ரான் முகநூல் பக்கத்தில் ஒரு கடிதத்தை பதிவிட்டு இருந்தார் அதில் பக்கம் பின் அபூ என்பவர் என்ற பெயரில் முகநூல் பற்றி இருந்தது .அவர் ஒரு நாட்டின் உளவுத்துறையின் முகவர் என்கிறார். அவர் இவர்களைப் பற்றி அந்த வெளிநாட்டு உளவுத்துறைக்குத் தகவல்களை வழங்கி வந்ததாகக் கூறுகிறார்.

அதற்குப் பதிலாக, 11. 10 .2018 அன்று பக்கம் பின் அபூ என்பவர், சஹ்ரான் இஸ்ரேல் உளவுத்துறையின் முகவர் என்கிறார்.

சஹ்ரான் இஸ்ரேலினால் வாங்கப்பட்ட முகவராக (ஏஜென்ட்) இருந்திருக்கிறார்.

பாலஸ்தீனத்தில் காசா பகுதியில் நடைபெறுகின்ற யுத்தம் பேரவலங்களை ஏற்படுத்தி வருகிறது. கைப்பற்றப்பட்ட பலஸ்தீனப் பிரதேசங்களில் சர்வதேச மனித உரிமைச் சட்டங்களை முற்றிலும் மீறி, இஸ்ரேலிய அரசாங்கம் யுத்தக் குற்றங்களையும் இனச் சுத்திகரிப்பையும் மேற்கொண்டு வருகிறது .அதற்கு மேற்குலகமும் ஒத்துழைத்துக் கொண்டிருக்கிறது. அதனை இதே வேளையில் அந்த நாடுகள் உட்பட உலகம் பூராகவும் அதனை கண்டித்து மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

பாலஸ்தீன மக்களின் மக்கள் அனுபவித்து வரும் அவலங்களை உலகம் கவனிக்க வேண்டிய நேரம் இது உலகம் இனி மேலும் பலஸ்தீன மக்களை வேறுபடுத்திப் பார்க்க கூடாது. ஆயிரக்கணக்கான சிசுக்களும் குழந்தைகளும் சிறுவர்களும் பெண்களும் முதியவர்களும் இஸ்ரவேலினால் கோரமாகக் கொலை செய்யப்பட்டு வருகின்றனர். வெள்ளை பொஸ்பரஸ் இரசாயனத் துகள்கள் அடங்கிய குண்டுகள் உட்பட ,குண்டு மாரி அவர்கள் மீது பொழியப்படுகின்றது. வைத்தியசாலைகளும் ,பள்ளிவாசல்களும், பாடசாலைகளும் தரைமட்டமாக்கப்படுகின்றன. மின்சாரம், நீர் வினியோகம் போன்றவை துண்டிக்கப்பட்டுள்ளன .நீண்ட காலமாகவே காஸா முதலான பலஸ்தீன பிரதேசங்களில் மக்கள் "திறந்த வெளி சிறைச்சாலை"யில் வாழ்வதாகவே கருத வேண்டி இருக்கிறது என்றார்.

---

**டயானா....**

**முன்பக்கத் தொடர்ச்சி**

டயானா கமகேயை ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் சஞ்சே பேரேரா தாக்கியது தொடர்பாக தெரிவிக்கப்படும் முறைப்பாடுகள் குறித்து சபாநாயகரினால் நியமிக்கப்பட்ட குழு எதிர்வரும் 25 ஆம் திகதி காலை கூடவுள்ளது.

இன்று பாராளுமன்ற கட்டடத்தில் இடம்பெற்ற சம்பவம் குறித்து சபாநாயகரினால் நியமிக்கப்பட்டுள்ள பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச தலைமையில் 25 ஆம் திகதி கூடவுள்ளது.இக் குழுவில் முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ச , அமைச்சர் ரமேஷ் பத்திரன, பாராளுமன்ற உறுப்பினர்களான கயந்த கருணாதிலக்க,இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டதாக கூறி ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலைக்கு முச்சக்கர வண்டியில் சென்ற இராஜாங்க அமைச்சர் டயானா மூன்று மணிநேரங்களின் பின்னர் வைத்தியசாலையிலிருந்து வெளியேறியதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேநேரம், இச் சம்பவம் குறித்து இராஜாங்க அமைச்சரும், ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் சுஜித் பெரேராவும்,ரோஹன திசாநாயக்கவும் புறம்பாக பொலிஸ் முறைப்பாடுகளை செய்திருக்கின்றனர்.

**(அப்ரா அன்சார்)**

---

**நெதன்யாஹு"வுக்கு....**

**முன்பக்கத் தொடர்ச்சி**

போராளிகளின் தாக்குதலில் இருந்து இஸ்ரேலை காக்க பெஞ்சமின் நெதன்யாகு தவறிவிட்டதாக தெரிவித்துள்ளனர்.

தற்போதைய பிரதமர் நெதன்யாகுவை விட முன்னாள் பாதுகாப்புத்துறை அமைச்சர் பென்னி கான்ட்ஸ் சிறந்த பிரதமராக செயல்பட வாய்ப்புள்ளது என மக்கள் தெரிவித்துள்ளனர். அதாவது பென்னி கான்ட்ஸ் சிறந்த பிரதமராக இருப்பார் என 48 சதவீதம் பேரும், நெதன்யாகு தான் சிறந்த பிரதமர் என 28 சதவீதம் பேரும் தெரிவித்துள்ளனர்.

## மின்சாரக் கட்டணம் அதிகரிப்பு:

# மக்களிடமிருந்து விரைவில் தக்க பதிலடி!

அரசாங்கம் மின்சாரக் கட்டணத்தை அதிகரித்ததுக்கு மக்கள் விரைவில் சரியாக பதில் அளிப்பார்கள் -ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் மத்தும பண்டார!

அரசாங்கம் அண்மையில் மின்சாரக்கட்டணத்தை அதிகரித்ததற்கு எடுத்த முடிவிற்கு மக்கள் எதிர்காலத்தில் சரியான பதில் அளிப்பார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

மின்சார சபையின் பிரேரணைகளை அங்கீகரிப்பதற்கு மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு அவசியமா என்ற கேள்வியும் அவர் எழுப்பியுள்ளார்.

அரசாங்கம் மின் கட்டணத்தை உடனடியாக அமுலாகும் வகையில் அதிகரிப்பது குறித்து கருத்துக் கேட்ட போதே பேராசிரியர் இந்த கருத்தை தெரிவித்துள்ளார்.



சுஐப்.எம்.காசிம்



# வேதனையின் நுழைவாயிலாகும் வேதங்களின் முகவாசல்கள்!

பண்டைய நாகரீகத்தின் தொட்டில் பிரதேசம், பிரேதப் பெட்டிகளை சுமந்து திரியும் நேரமிது. பெரும் மனிதாபிமான பேரிடரை ஏற்படுத்தியுள்ள காஸா, இஸ்ரேல் யுத்தத்தை நிறுத்தும் முயற்சிகள் எட்டாக் கனிகளாகின்றன. எனவே, களங்களை கடந்து காரணங்களை தேடியாக வேண்டும். இராணுவ வெற்றிகளை ஈட்டிக்கொள்ள முண்டியடிக்கும் தரப்புக்கள், மூச்சிமுக்க களைத்துப் போனதை களமுனைகள் காட்டுகின்றன.

இதற்குள், பாதிக்கப்பட்டோர், உயிரிழந்தோர் மற்றும் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டுள்ளோரின் உறவினர்கள் படும்பாடுதான் பரிதாபமானது. ஆட்சி, அதிகாரம், நிலம், புலம் எதுவும் வேண்டாம். எஞ்சியுள்ள உறவுகளை ஒப்படையுங்களென்ற ஓலங்களே உயர்ந்து வருகின்றன. இந்த ஓலங்கள் உள்ளூர்க் கலவரங்களை ஏற்படுத்தலாமென அஞ்சிய இஸ்ரேல், ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோர் லொறிகளில் ஏற்றப்பட்டு காஸ ாவுக்குள் அனுப்பப்படுவரென எச்சரித்துள்ளது. தமது அன்புக்குரியவர்களை பாதுகாத்தால் போதுமென்ற இவர்களது பதறல்கள், போர்க்கள ஒப்பாரிகளை விடவும் காதுகளை பிளந்து கிழிக்கின்றன.

இடிந்து விழும் கட்டடங்கள், எரிந்தெழும்பும் தீப்பிழம்புகளில் இறைதூதர்களின் காருண்யங்கள் மட்டும்தான் உயிர் பிழைக்கப்போகின்றன. இஸ்ரேலிய சிறைகளிலுள்ள பலஸ்தீனர்கள், காஸாவில் பணயக்கைதிகளாக வைக்கப்பட் டுள்ள யூதர்களின் உறவினர்களுக்கு நல்லது நடக்குமா? என்ற அச்சத்தில் ஆழ்ந்துள்ளன வேதங்களின் முகவாசல்கள்.

இஸ்ரேலின் எல்லை மீறிய தாக்குதல்கள் வைத்தியசாலைகள், புகலிட முகாம்கள் எதையும் விட்டுவைக்காதுள்ள நிலையில், இருதரப்புப் பணயக்கைதிகளின் எதிர்காலமும் பிரேதப் பெட்டிகளாகப்போகிறதோ?. எனவே, இழந்தது போதும், இருப்போர் பாதுகாக்கப்பட பிரார்த்திப்போம். போர்க்களம் உக்கிரமாவதாலும் ஓரபட்சமும் பாரபட்சமும் பலப்பட்டுள்ளதாலும் பிரார்த்திப்பது மற்றும் பிராயச்சித்தம் தேடுவதைத் தவிர வேறு வழிகள் துலங்கவில்லை.

தரைவழித் தாக்குதலுக்கு பல தினங்களுக்கு முன்னரே தயாரான இஸ்ரேல், காஸாவுக்குள் நுழைய பச்சைக்கொடி காட்டியிருக்கிறது. போர்முனையின் நேரடிக்களத்துக்கு வந்த இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் இதற்கான உத்தரவைப் பிறப்பித்து, சிறிய உரையும் நிகழ்த்தினார். "வாரங்களாகலாம் அல்லது மாதங்களாகலாம் எதிரியை வீழ்த்தும் வரைக்கும் வீறாப்புடன் போரிடுங்கள் என்றார்". சக ஆதரவுகளை எதிர்பார்த்து வியூகம் வகுத்த ஹமாஸ், சுரங்கப்பாதைகள் புதைந்துள்ள காஸாவுக்குள் யூத இராணுவம் நுழைவதை எதிர்பார்த்து விழித்திருக்கிறது. இதனால், வான்தாக்குதல்களைத் தவிர வேறு வழிகள் இஸ்ரேலுக்குப் பாதுகாப்பானதாகவும் இல்லை.

இந்த உத்வேகத்தில்தான் வைத்தியசாலையிலும் குண்டுகள் வீசப்பட்டுள்ளன. அதிகளவு எதிர்ப்பை எதிர்கொள்ள நேர்ந்ததால், ஹமாஸின் ஏவுகணையே வீரியம் தவறி வைத்தியசாலையில் விழுந்ததாக இஸ்ரேல் கூறுகிறது. வீரியமிழந்த ஏவுகணையே இந்தளவு சேதத்தை ஏற்படுத்தியிருந்தால், இஸ்ரேலின் தெருக்களில் தெறித்து விழுந்த ஏவுகணைகள் அங்கு எந்தளவு சேதங்களை ஏற்படுத்தியிருக்கும். அகதிகள் தஞ்சமடைந்த ஐ.நா.வின் பாடசாலைக்குள் தாக்குதல் நடத்தும் தேவை ஹமாஸ/க்கு இருக்காது. இதனால், இஸ்ரேல்தான் இக்கொடிய குற்றத்தை இழைத்திருக்கிறது.

இழப்புக்களை அளவிட்டு வெற்றி, தோல்விகளை நிர்ணயிக்க முடியாதுள்ள போரிது. எதிர்கால வியூகங்களில்தான் இங்கு வீரன் கணிப்பிடப்படுகிறான். சுற்றியுள்ள அரபு நாடுகள் நேரடியாக காஸ ாவுக்கு உதவாவிடினும் சமாதானம் வந்துவிட்டால், அரபு லீக் உட்பட முஸ்லிம் நாடுகளின் உதவிகள் இங்குதான் ஓடியும், தேடியும் வருவதுண்டு. அதேபோல, ஐரோப்பா மற்றும் அமெரிக்கா என்பன இஸ்ரேலுக்கான உதவிகளை வழங்குவது வழமையான நிகழ்ச்சி நிரலுக்குட்பட்டன.

பத்தாண்டு கடன் திட்டத்தில் 2019 முதல் 2028 வரை, 38 பில்லியன் அமெரிக்க டொலர் உதவிக்கு ஒப்படமிடப்பட்டது. இதில், எஞ்சிய எட்டு பில்லியனில் மூன்று பில்லியனை அவசரமாகத் தருமாறு இஸ்ரேல் கோரியுள்ளது. இதற்கு அமெரிக்கா இணங்கியுள்ளது. ஏற்கனவே இணங்கிய திட்டமென்பதால் அரபு நாடுகளுக்கு இதை எதிர்க்க முடியாதுள்ளது. இதனால், புதிய உதவிக்காக ஒப்பந்தங்களை கைச்சாத்திடக் கூடாதென அடம்பிடித்தும், எஞ்சிய பழைய தொகையை யுத்த காலத்தில் வழங்குவது முறையல்ல என்றும் கூறியுமே, ஜோ பைடனை சந்திக்க அரபுலகம் மறுத்துவிட்டது.

காஸா மக்களுக்கு நாளாந்தம் நூறு லொறிகளில் உதவிகள் தேவைப்படுகின்றன. ஆனால், இருபது லொறிகளுக்கே அனுமதி ஏற்கப்பட்டுள்ளது. பழங்கள், பழச்சாறுகள் மற்றும் கனிரசங்கள் ஏற்றிச் செல்லும் லொறிகளைக் கண்ணுறுகையில் கண்கள் பனிக்கின்றன. ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இறைவனின் ஏவலின் பிரகாரம், இந்த பாரான் தேசத்திலிருந்து இறைதூதர் ஆப்ரஹாம் (இப்ராஹீம்) தனது மனைவி ஹாஜருடன் (ஹாஜரா) புதல்வர் இஸ்மவேலை (இஸ்மாயில்) மக்காவுக்கு அழைத்துச் சென்று செய்த பிரார்த்தனை நிழலாடுகிறது. "என் இறைவனே உன்னை நாடி வரும் அடியார்களுக்கு காய்களையும் கனிகளையும் சொரிந்துவிடு". வயல்கள், கழனிகள் மற்றும் சோலைகள் நிறைந்த பாரான் தேசத்தை நோக்கியவாறே இப்பிரார்த்தனை புரியப்பட்டது.

www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2023 OCTOBER 22 - SUNDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# மூளுமா மூன்றாம் உலக யுத்தம்?

இன்று உலகம் முழுவதும் பேசும் பொருளாக பாலஸ்தீன மக்களின் பிரச்சினைகள் உருவெடுத்து வருகிறது. தற்போது, இந்த பிரச்சினை அரபு யுகத்தை தாண்டி சர்வதேச பிரச்சினையாக மாறியுள்ளது. இது மூன்றாம் உலகப்போருக்கு வழி வகுக்கும் என்கிற நிலையில் ஆன கருத்துக்களை நாம் முற்றிலுமாக மறுத்து விட முடியாது என்பதே தற்போதைய நிலையாக உள்ளது .

1948, 1967 மற்றும் 1973 ம் ஆண்டு நடைபெற்ற போர் சூழலை விட தற்போதைய நிலை, இஸ்ரேல் ராணுவத்திற்கு மிகவும் கவலைக்குரிய ஒன்றாகவே அவதானிக்கப்பட்டுள்ளது. ஏனெனில், ஈரான் இந்த பிராந்தியத்தில் மிகவும் வல்லமை உள்ள ஆயுதங்களை வைத்துள்ள இராணுவமாக திகழ்கிறது. ஈரானிய இராணுவத்தின் துனை இராணுவ போராட்ட குழுவாக திகழும் ஹிஸ்புல்லா மிகுந்த வலிமையான குழுவாக திகழ்கிறது. ஹிஸ்புல்லா போராட்ட குழுவில், 1,00000 பேர் வரை இருப்பதாக தெரிகிறது . அதேநேரத்தில் ஹிஸ்புல்லா ராணுவத்தில் தொலை தூர ஏவுகணை தாக்குதலை நடத்த கூடிய அளவில் அவர்களிடம் 1,50000 க்கு மேற்பட்ட ராக்கெட் குண்டுகள் மற்றும் ஏவுகணைகள் இருப்பதாகவே தோன்றுகிறது. இதனை அமெரிக்கா ராணுவமும் உறுதி செய்துள்ள நிலையில் இது இஸ்ரேலிய இராணுவதலிற்கு மிகவும் துக்ககரமான செய்தி என்பதில் ஐயமில்லை. தற்போதைய நிலையில், வெளிப்படையாகவே ஈரான் அரச தலைமை இஸ்ரேல் ராணுவத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளது . ஈரான், ஹிஸ்புல்லா, ஹமாஸ் மற்றும் ஏமனில் இருந்து செயல்பட்டு வரும் போராட்ட குழுக்கள், ஜிகாதிகள் என்று ஒரு பெரும் தொகையான குழுக்கள் நேரடியாக இஸ்ரேலிய இராணுவ தாக்குதலை தொடரும் நிலை ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை.

இஸ்ரேல் என்கிற தேசத்தில் வாழும் மக்கள் இஸ்ராயீல் என்று அழைக்கப்படுகின்றனர்.அதாவது "இஸ்ரா "என்கிற வார்த்தைக்கு ஹிஃப்ரூ மொழியில் அடிமை என்று பொருள்படும். அடுத்து, "யீல் "என்கிற வார்த்தைக்கு கடவுள் என்று பொருள் தருவதாக மொழிபெயர்ப்பு வல்லுனர்கள் சுட்டி காட்டி உள்ளனர். அதாவது, இஸ்ராயீல் மக்கள் கடவுளின் அடிமைகள் என்று தான் பொருள் தருவதாக உள்ளது.

இஸ்ரேலிய இராணுவம் உலகின் மிகுந்த அளவில் ஆற்றல் மற்றும் நுணுக்கங்களை கொண்டதாக அறியப்பட்டுள்ள நிலையில், அந்த கட்டமைப்பு மற்றும் மேலாண்மை தன்மை கொண்ட அனைத்தையும் ஹாமாஸ் படையினர் சில மணி நேரங்களில் முற்றிலுமாக உடைத்து தள்ளி உள்ளது தான் இஸ்ரேலிய இராணுவததிற்கு மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த அதிர்ச்சியில் இருந்து மீளுவதற்கு அவர்களுக்கு எந்த வழி, வகையும் தெளிவாக தெரியாத நிலையில் தான் பொது மக்களின் மீது காட்டுமிராண்டித்தனமான ஏவுகணை தாக்குதலை இஸ்ரேல் நடத்தி வருவதை நாம் தெளிவாக காணக்கூடியதாக உள்ளது. உதாரணமாக, அல் அஃராப் அராஃப் மருத்துவமனையில் தாக்குதல் நடத்தி அப்பாவி பொதுமக்கள், குழந்தைகள் உட்பட 800 பேரை படுகொலை செய்து இருப்பதை உலகம் கோழைதனத்தின் உச்சபட்சமாக பார்க்கிறது என்பதே உண்மையாகும்.அதனை தொடர்ந்து இன்று அல் குபா மருத்துவமனையில் இருந்து நோயாளிகள் வெளியேற வேண்டும் என்று இஸ்ரேல் ராணுவம் எச்சரிக்கை விடுத்து இருப்பதை நாம் காணும் போது யூத இராணுவம் விரக்தியின் உச்சபட்ச நிலைக்கு சென்று விட்டதை நாம் நன்றாகவே தெரிந்து கொள்ள முடிகிறது.

பாலஸ்தீன பிரதேசம் முழுமையாக தன்னுடைய கட்டுபாட்டில் கொண்டு வர வேண்டும் என்கிற அடிப்படையில் தான் யூதர்கள் நீண்ட கால திட்டத்தை வடிவமைப்பு செய்து இருந்தனர் . இந்த திட்டத்தின் மூலம் அரபுலகம் முழுமையாக தனது கட்டுக்குள் எப்போதும் வைத்து கொள்ள முடியும் என்று அமெரிக்கா ஏகாதிபத்திய சக்திகளின் ஆசையாக இருந்தது. இந்த ஆசை ஹாமாஸ் படையினரால் முற்றிலுமாக துடைத்து எறியப்பட்டுள்ளது என்பதே உண்மையாகும்.

தற்போதைய பல்வேறு நடைமுறை சிக்கல்களால் இஸ்ரேலிய இராணுவம் தட்டு தடுமாறி வருவதை பல்வேறு சர்வதேச பத்திரிகைகள் சுட்டி காட்டி வருவதை நாம் காண முடிகிறது. இஸ்ரேலிய அரசும், அதன் சர்வதேச கூட்டாளிகளுக்கும் இனி இது போன்ற சிக்கல்கள் தொடரும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

ஈரான், ஹிஸ்புல்லா, ஹமாஸ் மற்றும் ஏமனில் இருந்து செயல்பட்டு வரும் போராட்ட குழுக்கள், ஜிகாதிகள் என்று ஒரு பெரும் தொகையான குழுக்கள் நேரடியாக இஸ்ரேலிய இராணுவ தாக்குதலை தொடரும் நிலை ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை.

அதனைத் விடுத்து சர்வதேச சக்திகளின் முழுமையான ஆதரவு பாலஸ்தீனத்திற்கு பல்வேறு வழிகளில் கிடைக்க கூடிய வழி வகை தெளிவாக தெரிகிறது. இதையெல்லாம் நாம் கவனித்தால் கையில் கொடுக்கப்பட்ட விஷ பாட்டிலை ஏந்திய வண்ணம் இருக்கும் இஸ்ரேலிய இராணுவம் அந்த விஷத்தை அவர்கள் அருந்துவார்களா அல்லது தூக்கி எறிந்து விடுவார்களா என்பதை நாம் பொருத்து இருந்து தான் பார்க்க வேண்டும் என்பதே யதார்த்தமான உண்மையாகும்...!!

# கடும் நிபந்தனைகளுடன் இந்திக தொடவத்தவுக்கு பிணை




முஸ்லிம் சமூகம் சார்பாக மாலிகாகந்த மாஜிஸ்திரேட் நீதி மன்றத்தில் கடந்த 20.10.2023 அன்று ஆஜரான சட்டத்தரணிகள் ஷிராஸ் நூர்தீன், மாஸ் யூஸூஃப், அன்வர், பர்ஸான், பஸன் வீரசிங்க ஆகியோர் கேட்டுக் கொண்டதற்கிணங்க சோதிடர் இந்திக தொடவத்தவிற்கு பிணை வழங்கப்பட்டது.

இந்திக தொடவத்த தான் வெளியிட்ட மதநிந்தனை கருத்துக்களுக்காக மன்னிப்புக் கோருவதாகவும், அவற்றை சமூக ஊடகங்களில் இருந்து நீக்கி விடுவதாகவும் தனது சட்டத்தரணியூடாக நீதிமன்றில் தெரிவித்தார்.

இறைதூதர் (ஸல்) அவர்கள் தன்னை நிந்தித்தவர்களுடன் எவ்வாறு நடந்து கொண்டார்கள், கௌதம புத்தர் எவ்வாறு நடந்து கொண்டார்கள் போன்ற விடயங்களை முஸ்லிம் சமூகம் சார்பாக ஆஜரான சட்டத்தரணிகள் நீதிமன்றில் எடுத்துக் கூறியே பிணை வழங்க உடன்பட்டனர்.

பிரதிவாதியின் சட்டத்தரணி இஸ்லாமிய நெறிமுறைகளை பின்பற்றி பெருந்தன்மையாக நடந்து கொண்ட சட்டத்தரணிகளுக்கு நன்றியும் கூறியுள்ளார்.

இன்று மாஜிஸ டிரேட் நீதிமன்றில் இறைதூதர் (ஸல்) அவர்கள் குறித்தும் அவர்களது வழிகாட்டல்கள் குறித்தும் எடுத்துக் கூறிய சந்தர்ப்பம் அங்கு வருகை தந்திருந்த சகலரது வரவேற்பையும் பெற்றதாகவும் மிகச்சிறந்ததோர் முன்மாதிரியாக (தஃவா) இருந்ததாகவும் சிரேஷ்ட சட்டத்தரணி சற்று முன்னர் எனக்கு அனுப்பியுள்ள குறிப்பில் தெரிவித்துள்ளார்.



இன்ஷா அல்லாஹ்
புனித உம்றா
NOVEMBER - 2023
R.AAKHIR / J.AWWAL - 1445

வெளிநாடுகளில் தொழில் புரிவோரும் எம்மோடு இணைந்து பயணிக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்து தரப்படும்

மாஷா அல்லாஹ்
- இன்ஷா அல்லாஹ் இரண்டு ஹரம்களிலும் ஜும்ஆக்கள்.
- இரண்டு ஹரம்களுக்கும் மிக அண்மையில் தங்குமிடம்.
  - மக்கா Taj-Al-Raaqi (3 Star Hotel)
  - மதீனா Amjad-Al-Gharra (3 Star Hotel)
- தாயிப், ஆயிஷா மஸ்ஜித் பயணங்கள் உட்பட மக்கா, மதீனா ஸியரத் etc.
- சிறப்பான உணவு பானங்கள்.
- உலமாக்களின் பூரண வழிகாட்டலுடன் மேலும் பல சேவைகள்.

SPECIAL PACKAGE
375,000/-
10 DAYS

எமது உம்றா குழு இன்ஷா அல்லாஹ்
புறப்படுதல்
08.11.2023 Mid-Night
09th Early Morning
COL - JED
QATAR AIRWAYS
திரும்புதல்
18.11.2023 - 4.30 PM
MAD - COL

முன்னாள் ஆசிரிய ஆலோசகர், கொழும்பு பெரியபள்ளிவாசல் கதீப் மௌலவி எம்.ஏ.எம். இப்ழால் (பாரி) B.A.(Hons) அவர்களின் தலைமையில் இன்ஷா அல்லாஹ் செல்ல இருக்கும் இந்த யாத்திரையில் இணைந்து பதிவு செய்துகொள்ள உடன் அழையுங்கள்:

IFLAL MOULAVI : 077 731 0845(SL) /00 966 54 804 4113(KSA)
SHIFRI HAJ : 077 755 6200
AL HAJ S. SHAHABDEEN (JP) : 077 311 8778
CHAIRMAN / MANAGING DIRECTOR

IATA Accredited Agent
Air Line Ticketing, Haj & Umra Operators
SKY WORLD TRAVELS (PVT)LTD
F-21, People's Park Complex, Col-12 Tel: 011 2395365



எம்.எஸ்.
அமீர்
ஹுசைன்

# மாறப்போகும் தேர்தல் முறை



நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி அல்லது ஒழித்துக்கட்டும் நோக்கம் தற்போதைக்கு அரசாங்கத்திற்கு இல்லை. அதற்கான மக்கள் ஆணை இந்த அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டில்லை. நடைமுறையில் இருக்கின்ற தேர்தல் முறையை மாற்றியமைப்பதற்கான யோசனை அமைச் சரவைக்கு சமர்ப்பிக்கப் பட்டிருப்பதாக நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ 2023 அக்டோபர் 18 ஆம் திகதி பாராளுமன்றத்தில் அறிவித்தார். அதே நேரம் தேர்தல் முறை மறுசீரமைப்புக்கான சிபாரிசுகளை செய்வதற்காக 09 பேர்களை உள்ளடக்கிய குழுவொன்றையும் ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்கா நியமித்துள்ளார். அது தொடர்பான அரசாங்க வர்த்தமாணி அறிவித்தலும் வெளியிடப்பட்டி ருக்கின்றது.

இலங்கையில் உரிய காலத்திற்கு தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று தொடர்ச்சியான அலுத்தங்கள் அரசாங்கத்திற்கு கொடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையை ஆளும் கட்சி தவிர்ந்த ஏனைய அரசியல் கட்சிகள், அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் ஜன நாயகத்தை இந்நாட்டில் நிலைநிறுத்தி வலுப்படுத்த முயற்சி செய்யும் அமைப்புக்கள் மத்தியில் பலமான ஒரு சந்தேகத்தை ஏற்படுத்தி இருக்கின்றது. அரசாங்கம் ஏன் இந்த நேரத்தில் நடைமுறையில் இருக்கின்ற தேர்தல் முறையையும் சட்டங்களையும் மாற்றியமைக்க அவசரப்பட வேண்டும்? பின்னணி என்னவாக இருக்கும் என்று கேள்வி எழுப்பி உள்ளனர்.

சமகி ஜனபலவேகயவின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச மற்றும் உத்தர லங்கா சபா பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவங்ச ஜே.வி.பி. யும் இதனை கண்டித்திருக்கின்றது. மஹிந்த ராஜபக்ஷ சார்பான பொதுஜன பெரமுண அணியும் இதனை கண்டித்திருக்கின்றது. அத்துடன் அரசாங்கம் இதய சுத்தியோடு இவ்வாறு தேர்தல் மறுசீரமைப்பை செய்வதாக இருந்தால் உடனடியாக ஒத்திப்போடப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடத்த நிதியை வழங்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அண்மையில் உத்தர லங்கா சபாவையின் கூட்டம் கொழும்பில் நடைபெற்றபோது. விமல் வீரவங்ச, அரசாங்கம் தேர்தல்களை பின்போட திட்டமிட்டு வருவதாகவும் அதற்கு ஏற்ற வகையில் தேர்தல் திருத்த சட்டமூலம் ஒன்றுக்கான அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க ஏற்பாடாகி இருக்கின்றது என்ற தகவலை வெளிப்படுத்தினார். அதே நேரம் கடந்த 2023.10.12 ஆம் திகதி எதிர்க்கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசிய ஹர்ஷன ராஜகருணவும் இதே விடயத்தை தெரிவித்திருந்தார்.

அரசாங்கத்தின் இந்த முயற்சி உண்மையானது என்பதை கடந்த 18 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எதிரணி உறுப்பினர் ஒருவரின் கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையில் நீதி அமைச்சர் விஜேதாசா ராஜபக்ஷவே உறுதிப்படுத்தினார். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்துக்கட்ட அரசாங்கம் முயற்சி செய்கின்றதா என்று வினவப்பட்டதற்கு பதிலளிக்கையில் அவ்வாறான முயற்சி எதுவும் இல்லை. இந்த அரசாங்கத்திற்கு அதற்கான மக்கள் ஆணை வழங்கப்பட்டில்லை. அதனால் தற்போதைக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதித முறை தொடரும். ஆனாலும் நடைமுறையில் இருக்கின்ற தேர்தல் முறையை மாற்றியமைப்பது தொடர்பாக சில நடவடிக்கைகள் எடுக்கப்பட இருப்பது பற்றியும் அது தொடர்பான யோசனையை அவரே அமைச்சரவைக்கு சமர்ப்பித் திருப்பது பற்றியும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிலையில்தான் ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்கா 09 பேர்களைக் கொண்ட ஒரு குழுவை நியமித்து 07 அம்சங்களின் அடிப்படையில் தேர்தல் முறை மறுசீரமைப்பு தொடர்பாக எதிர்வரும் 06 மாத காலப்பகுதிக்குள் ஒரு விவரிவான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளார். அந்த குழுவுக்கு தலைவராக ஓய்வுபெற்ற ஜனாதிபதி சட்டத்தரணியும் நீதியரசருமான பிரியசாத் டெப்பை நியமித்துள்ளார். சுந்தரம் அருமைநாயகம், சேனாநாயக்க அலக்செண்டர்லாகே, ஜனாதிபதி சட்டத் தரணி நலின் அபேசேகர, ரஜித நவின் சேனாரத்ன, ஏ.எல்.எம். சலீம் தீபானி சமந்த ரொட்ரிகோ, திருமதி சாகரிகா தெல்கொட மற்றும் நிமல்கா பெர்னாண்டோ ஆகியோர் இக்குழுவில் இடம்பெறும் ஏனைய அங்கத்தவர்களாவர்.

இந்த தேர்தல் சட்டங்கள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை தயாரிக்க உள்ள குழு முக்கியமாக ஏழு விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்த நடைமுறையில் இருக்கின்ற காகித வாக்குச் சீட்டு புள்ளடி முறைக்கு பதிலாக இலத்திரனியல் வாக்களிப்பு முறையை அறிமுகம் செய்தல், வெளிநாடுகளில் தொழில்புரியும் மற்றும் வசிக்கும் இலங்கையர்களும் வாக்களிக்க ஏற்பாடுகளை செய்தல். இருக்கின்றன.இளைஞர்கள் மற்றும் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல்,

அத்துடன் ஒரு அபேட்சகர் மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்யும் இரண்டு தேர்தல்களில் போட்டியிடுவது மற்றும் ஒரு தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட அதே நேரம் மற்றுமொரு மக்கள் பிரதிநிதியை தெரிவு செய்யும் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றால் இரண்டு பிரதிநிதித்துவத்தையும் வகிக்க சந்தர்ப்பம் வழங்குதல், தேர்தல் கடமைகளுக்காக ஒத்துழைக்கும் அரச ஊழியர்கள் அல்லாத ஊழியர் களுக்கும் தபால் மூல வாக்களிப்புக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்துதல் மற்றும் விகிதாசார பிரதிநிதித்துவ முறை, தொகுதிவாரி முறை கலந்த தேர்தல் முறையொன்றை அறிமுகம் செய்தல், தேர்தல் ஒன்றுக்கான அறிவித்தல் செய்தது முதல் தேர்தல் நடத்தப்பட்டு முடிவு அறிவிக்கும் வரையான காலத்தை குறைப்பது ஆகியவையே குறித்த ஏழு துறைகளுமாகும்.



இந்த குழுவில் இடம்பெற்றுள்ள அங்கத்தவர்களில் ஏற்கனவே தற்போதைய நிலையில் தேர்தல் ஒன்று அவசியம் இல்லை என்று ஜனநாயக உரிமைக்கு கைவைக்கும் அரசாங்கத்தின் நிலைப்பாட்டிற்கு ஆமா போடும் அங்கத்தவர்களும் இடம் பெற்றுள்ளமை இந்த குழுவின் அங்கத்தவர்கள் தொடர்பாக கடுமையான விமர்சனங்கள் எழுவதற்கு காரணமாக அமைகின்றன. இத்தகையவர்கள் இடம் பெறும் குழு நீதியாகவும் நியாயமான முறையிலும் நடுநிலையாக நின்று அதன் பணியை செய்யுமா என்பதுதான் அரசாங்கத்தின் இத்தகைய போக்கு தொடர்பாக சந்தேகம் கிளப்ப காரணமாக இருக்கின்றது.

இந்த குழுவின் அறிக்கை தயாராக ஆறு மகத காலம் பிடிக்கும். ஆவ்வாறாயின் 2024 ஆம் ஆண்டு ஜுன் மாதம் அளவில் அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவித்தல் செய்யப்படுவதற்கான காலம் நெருங்கும் போதே குழுவின் அறிக் கையும் எதிர்பார்க்கப்படுகின்றது. அறிக்கை கிடைத்தவுடன் நடக்க விருப்பது தேர்தல் திருத்த சட்டமூலம் தயாராகி பாராளுமன்றம் வரலாம். அது நிறைவேறினால் மீண்டும் எல்லை நிர்ணயம் என்றும் இன்னும் பல காரணங்களை காட்டி புதிய சட்டத்தின் படி தேர்தலை நடத்த கால அவகாசம் தேவை என்ற முறையில் 2024 ஆம் ஆண்டு நடைபெற உள்ள ஜனாதிபதித் தேர்தலை பின்போடலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறான ஒரு குழுவின் சிபாரிசை தொடர்ந்து நடைமுறையில் இருந்து வருகின்ற தேர்தல் சட்டங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக சட்டமூலம் ஒன்றை தயார்படுத்துவதற்காக அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு ஜனாதிபதியும் அரசாங்கமும் முயற்சி செய்து வருகின்றமையானது நாட்டில் நடைமுறையில் மக்கள் அனுபவித்து வருகின்ற ஜனநாயகத்தை அழிப்பதற்கான முயற்சியாகும். இவ்வாறு தேர்தல் திருத்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் அதற்கான ஏற்பாடுகளை செய்யும் வரையில் அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலை நடத்தாமல் பின்போடலாம். அதன் பின்னர் தேர்தல் வேண்டுமா வேண்டாமா என்று மக்களது அபிப்பிராயங்களை கோரும் கருத்தறியும் வாக்கெடுப் பொன்றை நடத்தி திட்டவட்டமாக தேர்தலை பின்போட திட்டமிட்டு வருகின்றது என்பதை அரசாங்கத்தின் இந்த போக்கை கண்டிப்பவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இதுகுறித்து பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பிய எதிர்க்கட்சித் தலைவர் அரசாங்கத்தின் இந்த போக்கு கடுமையான சந்தேகத்தை ஏற்படுத்தி இருக்கின்றது. அடுத்த வருடம் நடத்த வேண்டி இருக்கின்ற ஜனாதிபதித் தேர்தலை பின்போட தந்திரோபாயமான முறையில் அரசாங்கமும் ஜனாதிபதியும் காய் நகர்த்தல்களை செய்து வருகின்றர். அரசாங்கம் இதய சுத்தியோடு செயற்படவில்லை. அரசாங்கத்தின் நடவடிக்கைகளை நம்ப முடியாது. அப்படியாயின் நாம் எவ்வாறு அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பது. அவ்வாறு தேர்தல் சட்டங்களில் ததிருத்தம் கொண்டு வர உத்தேசிப்பது நாட்டு நலனையும் மக்கள் நலனையும் அடிப்படையாக கொண்டதாக இருந்தால் உடனடியாக உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு தேவையான 1000 கோடி ரூபாய்களை அரசாங்கம் விடுவித்து பின்போட்டுள்ள தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சாவால் விட்டுள்ளார்.

அதே நேரம் இவ்வாறான தேர்தல் முறையிலான மாற்றங்களை கொண்டு வருவதற்கான காரணம் மக்கள் தேர்தல்களில் நம்பிக்கை இழந்து வருகின்றனர். அதனால் மக்களுக்கும் இன்றைய கால சூழ் நிலைகளுக்கும் ஏற்றவிதமாக மாற்றங்களை அறிமுகம் செய்வது அவசியமாகின்றது என்று அரசாங்க தரப்பில் இருந்து நியாயங்களாக கூறப்படுகின்றது. ஆனால் உண்மை என்னவெனில் உரிய காலத்திற்கு அரசாங்களம் தேர்தலை நடத்தாமல் நொண்டிச் சாட்டுக்களை கூறி தேர்தலை பின்போட்டுள்ளமையே, அரசாங்கம் ஜனநாயக மரபுகளை மீறும் வகையில் அரசியல் காரணங் களையும் அதிகார மோகத்தின் காரணமாகவும் நடந்து கொள் கின்றமை போன்ற பின்புல காணி கள் மக்கள் தேர்தல் களில் நம்பிக்கை இழக்க வழி வகுத்துள்ள அடிப்படை யாகும்.

அதே நேரம் அரசாங்கம் குறித் மறுசீரமைப்பு குழுவுக்கு கவனம் செலுத்துமாறு உத்தரவிட்டுள்ள சில துறைகள் காலத்தின் தேவை கருதியவைகளாகும். இரத்திரனியல் வாக்களிப்பு முறை, இளைஞர்கள் மற்றும் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல், தேர்தலுக்கான காலம் அறிவிக்கப்பட்டதில் இருந்து தேர்தல் முடிவு வெளியிடப்படுவது வரையான 55 நாட்களுக்கு மேற்பட்ட காலத்தை குறைத்தல், போன்ற விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துவது காலத்தின் தேவை கருதியதாகும். ஆனால் அதனை செய்வது நடக்க இருக்கின்ற தேர்தலை பின்போடுவதற்கான தந்திரோபாய உத்தியாக அமையுமானால் அது யதார்த்தமாகவே மக்களின் ஜனநாயக உரிமையை குழிதோண்டி புதைப்பதற்கு சமமாகும். ஏற்கனவே இவ்வருடம் மார்ச் மாதம் நடைபெற வேண்டி இருந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் பின்போடப்பட்டது.

அதேபோன்று மாகாண சபைகளுக்கான தேர்தல் பின்போடப்பட்டு நான்கு வருடங்களாகின்றது. இப்படியான ஒரு சூழ்நிலையில் நடைமுறையில் இருக்கின்ற தேர்தல் சட்டங்களும் தேர்தல் முறையும் பொருத்தமற்றது என்ற காரணத்தை அடிப்படையாக வைத்து மக்களை மடையர்களாக்கி இன்னுமொரு தேர்தலை நடத்தாமல் ஒத்திப்போட நினைப்பது அரசாங்கமும் ஆட்சியாளர்களும் தமக்கு தாமே புதைகுழிகளை தயார்படுத்திக் கொள்வதற்கு சமமாகும். ஏற்கனவே மக்களை தவறாக வழிநடத்தி நாட்டை பொருளாதார ரீதியாக அழிவுக்கு இட்டுச் சென்ற 69 இலட்சம் வாக்குகளால் பதவிக்கு வந்த ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷ பதவியை விட்டு ஓடும் ஏன் ஏற்பட்டது? அதிகார துஷ்பிரயோகம் எவ்வளவு காலத்திற்கு மக்களால் அங்கீகரிக்கப்படும்? அதனால் ஏற்படக்கூடிய பின்விளை வுகள் ஏற்படுத்தப்போகின்ற மோசமான விளைவுகள் யாவை என்பதை ஜனாதிபதியும் ஏனைய அமைச்சர்களும் அறிந்து செயற்படுவதே சிறந்த அரசியல் எதிர்காலத்திற்கு அடித்தளம் இடுவதாக அமையும். அதுவே நாட்டின் எதிர்கால சுபீட்சத்திற்கும் காரணமாகின்றது.

# ஜனாதிபதி ரணிலுக்கு மரிக்காரின் சாட்டையடி



எம்.ஏ.எம். நிலாம்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அண்மையில் சீனாவுக்கு மேற்கொண்ட விஜயம் நாட்டைப் பொருளாதார ரீதியில் மீளக் கட்டியெழுப்புவதற்கு கை கொடுத்திருப்பதாகவும் சீனா அதன் முழுப் பங்களிப்பை வழங்குவதற்குத் தயாராக இருப்பதாகவும் இலங்கை – சீன இருதரப்பு வட்டாரங்களில் இருந்து தெரிவிக்கப்படுகின்றது.

இதில் முக்கியமான அம்சமாக இரு நாடுகளுக்குமிடையினான நிதிப் பரிமாற்றம் மிக முக்கியமானதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி சீனா தனது நட்பு நாடுகளின் ஒத்துழைப்பை இலங்கைக்குப் பெற்றுக் கொடுக்க உதவுவதாக சீன நிதியமைச்சர் உறுதியளித்திருக்கின்றார். கடந்த வியாழக்கிழமை பீஜிங்கில் இடம் பெற்ற இரு தரப்பு பேச்சுக்கள் வெற்றிகரமாக அமைந்ததாக ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடன் மீட்சிக்கான இடைக்கால நீண்ட கால வேலைத்திட்டத்திற்கு சீனா இலங்கைக்குப் பூரணமான ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்க இணக்கம் தெரிவித்திருக்கின்றது. சீன நிதியமைச்சர் லியுகுன் உடனான சந்திப்பு மிகவும் ஆரோக்கியமானதாக அமையப்பெற்றதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

இலங்கை முகம் கொடுத்திருக்கும் பொருளாதார சவாலை சீனா நன்கு புரிந்து கொண்டிருப்பதாகவும் நெருக்கடியைச் சமாளிக்க இலங்கை எடுத்து வரும் நடவடிக்கைகளை வரவேற்பதாகவும் சீன நிதியமைச்சர் கூறியிருக்கின்றார்.

இதில் முக்கியமான விடயம் இலங்கைக்கும் சீனாவுக்குமிடையிலான பண பரிமாற்றம் தொடர்பில் நீண்ட கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றதாகவும் சீனாவுடன் நெருக்கமாகச் செயற்படும் சர்வதேச நிறுவனங்கள் இலங்கைக்கு ஆதரவளிக்குமாறு கோரிக்கை விடுப்பதாகவும் சீனா தெரிவித்திருக்கின்றது.

இங்கு ஜனாதிபதி கருத்து தெரிவித்த போது, நெருக்கடிக்குள் தள்ளப்பட்ட போது சீனா கை கொடுத்து உதவியதையிட்டு தமது நன்றியைத் தெரிவித்துள்ளார். நாட்டின் பொருளாதார மீட்சியை ஏற்படுத்துவதற்காக இலங்கையில் போட்டித்தன்மை வாய்ந்த டிஜிட்டல் மற்றும் பசுமைப் பொருளாதாரத்தை உருவாக்குவதற்குமான வேலைத்திட்டம் தொடர்பாகவும் சீனாவுக்கு ஜனாதிபதி தெளிவுபடுத்தியுள்ளார்.

### மௌலானாவின் பதவியேற்கும் நஸீரின் பகிரதப் பிரயோத்தனமும்

இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஒருபோதும் நடந்திடாத ஒரு தீர்ப்பை அண்மையில் உச்சநீதிமன்றம் வழங்கியுள்ளது. நாட்டின் ஆரம்பம் முதலே பல பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சி மாறியிருக்கின்றார்கள். ஆனால், அரசியலமைப்பு விதிகளுக்கமைய அந்த எம்.பி.க்களை கட்சிகள் வெளியேற்றினாலும் அவர்களது எம்.பி.பதவி பறிபோகவில்லை. முதல் தடவையாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி. யான ஹாபிஸ் நஸீர் அகமடின் கட்சி உறுப்புரிமை பறிப்பு விவகாரத்தால் ஏற்பட்ட சட்ட சிக்கல் காரணமாக முஸ்லிம் காங்கிரஸ் நீதிமன்றம் செல்லாமலேயே பிறிதொருவரால் தொடரப்பட்ட வழக்கு காரணமாக அவரது உறுப்புரிமை பறிக்கப்பட்டது சட்ட ரீதியானது என உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக் காரணமாக நஸீர் அஹமட் பாராளுமன்ற உறுப்புரிமையை இழந்துவிட்டார். உச்சநீதிமன்றத் தீர்ப்பு காரணமாக கட்சி மாறிய பத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்களது அடிவயிறு கலங்கியுள்ளது.

நஸீருக்குப் பதிலாக மட்டு. மாவட்டத்தில் அடுத்த எம்.பி.யாக அலிசாஹிர் மௌலானா பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். அவர் தமது கன்னி உரையின் போது, சட்டம் துரோகத்தனத்துக்கு சரியான தீர்ப்பை வழங்கி விட்டது. இறைவன் சரியான பக்கம் இருப்பதற்கு ஒரு சாட்சியமாக இதனைச் சொல்ல முடியும். எனத் தெரிவித்திருக்கின்றார்.

தனது பதவியைத் தக்க வைப்பதற்கு நஸீர் அகமட் பல பகீரதப் பிரயத்தனங்களை முன்னெடுத்த போதும் அவை எதுவும் நீதியின் முன் எடுபடவே இல்லை.

"உலகின் மிகப்பெரிய சிறை முகாம் பாலஸ்தீனில்" இந்தியாஸ் பாக்கீர் மார்க்கார் சுட்டிக்காட்டுகிறார்

இஸ்ரேல் – ஹமாஸ் போர் 12 நாட்களாக நடந்து கொண்டிருக்கும் நிலை குறித்து ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மார்க்கார் பாராளுமன்றில் இஸ்ரேலை கடுமையாகச் சாடியுள்ளார்.

உலகின் மிகப்பெரிய திறந்தவெளி சிறை முகம் பாலஸ்தீனிலேயே இருப்பதாகவும் இஸ்ரேலின் இந்த மனிதாபிமானமற்ற மிருகத்தனமான செயலைக் கண்டிக்க உலகம் தவறிவிட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா.வும் அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் இது விடயத்தில் பசித்தோல் போர்த்திய புலிகளாக மாறியுள்ளதாக இம்தியாஸ் பாக்கீர் மார்க்கர் சாடியுள்ளார்.

அநீதி நிலையானதல்ல. நீதி என்றாவது வென்றே தீரும். அதுதான் நிலையானது எனவும் அவர் தமது கண்டன உரையில் தெரிவித்துள்ளார்.

### ஜனாதிபதி ரணிலுக்கு மரிக்காரின் சாட்டையடி

2048இல் நாடு அபிவிருத்தி அடைந்த நாடாகும் என்ற ஜனாதிபதியின் கானல் நீர் போதனையை ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. எம்.எஸ்.மரிக்கார் பாராளுமன்றத்தில் கடுமையாக விமர்சித்துள்ளார். 2048 ஆகும்போது ரணிலின் வயது நூறைத்தாண்டி விடும். அப்போது அவர் இருப்பாரா என்பது கூடத் தெரியவில்லை. நாட்டின் அபிவிருத்தி, பொருளாதார வளர்ச்சி என்றெல்லாம் ரணில் அடிக்கடி கூறி வருகிறார். இன்று நேற்றல்ல அவர் அரசியலுக்கு வந்த நாள் முதல் இதைத்தான் கூறுகின்றார்.

அவர் ஒரு தடவை இளைஞர்களுக்கு "தங்க பிரேஸ்லெட்" ஆசை காட்டியதையும் நாம் மறந்துவிடவில்லை. சட்ட ரீதியான தேர்தலை நடத்தாமல் கள்ளத்தனமாக அதிகாரத்தில் தொடர அவர் முனைகிறார். அவரது ஆசை இந்தத் தடவை நடக்காது. மக்களை ஆத்திரமூட்டினால் ஏற்படக்கூடிய விளைவுகள் பயங்கரமானதாக இருக்கும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

### நிகழ்நிலை சட்ட மூலத்திற்கு எதிராக வழக்கு

உச்ச நீதிமன்ற தீர்ப்பு ஜனாதிபதிக்கும் சபாநாயகருக்கும் நிகழ்நிலை சட்டமூலத்துக்கு எதிரான வழக்கின் தீர்ப்பை உயர் நீதிமன்றம் ஜனாதிபதிக்கும் சபாநாயகருக்கும் அறிவிக்கத் தீர்மானித்துள்ளது.

இந்த சட்ட மூலத்திற்கு நிகராக 45 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த மனுக்கள் மீதான விசாரணை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்தது. விசாரணை முடிவில் வழக்கின் தீர்ப்பை அரசியலமைப்பு விதிகளுக்கு அமைய ஜனாதிபதிக்கும் பாராளுமன்ற சபாநாயகருக்கும் அறிவிப்பதாக உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இதேவேளை, பயங்கரவாத தடை திருத்தச் சட்டம் மூலம் பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலுக்குள் உள்ளடக்கப்படாத காரணத்தை அதற்கு எதிரான மனுவை விசாரணைக்கு எடுப்பதில்லை என உச்ச நீதிமன்றம் தீர்மானித்து அதனைக் கைவிட்டுள்ளது.

### சட்ட சிக்கலுக்குள் பொலிஸ்மா அதிபர் நியமனம்

பொலிஸ் மா அதிபர் சி. டி. விக்கிரமரத்னவின் பதவிக்காலம் முடிவுற்ற நிலை அவர் மூன்று தடவைகள் பதவிக்கால நீடிப்பில் இயங்கி வருகின்றார். சில தினங்களுக்கு முன்னர் அவரது கால நீடிப்பு நியமனம் முற்றாக நீக்கப்பட்டுள்ளதாக அரசியலமைப்புச் சபை அறிவித்த நிலையில் அந்த முடிவை ஒரு மணி நேரத்துக்குள் ஜனாதிபதி சீனாவிலிருந்தவாரே மாற்றியமைத்து அடிக்கடி மூன்று மாதங்கள் என்றும் மூன்று வாரங்கள் என்றும் விக்ரமரத்தினவுக்கு பதவி நீடிப்பு வழங்கப்பட்டு வருகின்றது. இதன் மர்மம் என்னவென்று புரியவில்லை.

அதேநேரம் இந்தக் குறுகிய கால பதவி நீடிப்பை தேசிய மக்கள் சக்தியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அனுரா குமார திசாநாயக நகைச்சுவையாக விமர்சித்திருந்தார். தொலைபேசிக்கு கார்ட் போடுவது போன்று பொலிஸ் மா அதிபருக்கு "ரீலோட்" பதவி நீடிப்பு வழங்கப்படுகிறது எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.



# ரணிலையும் – சஜித்தையும்

# ஒரு அணியில் இணைக்க வியூகம்



திருச்சி
எம். கே. ஷாகுல் ஹமீது



கேள்வி: இலங்கையின் தற்போதைய அரசியல் நிலவரம் எப்படி இருக்கிறது?

பதில்: இலங்கை நாட்டில் பாரிய பொருளாதார சிக்கல் ஏற்பட்டு, அரசியல் மாற்றங்களும் ஏற்பட்டுவிட்ட தற்போதைய சூழலில், ஆட்சியில் இருக்கும் ஜனாதிபதிக்கு ஆதரவாக பாராளுமன்றத்தில் ஒரே ஓர் உறுப்பினரை மட்டும் கொண்டுள்ள நிலையில், முந்தைய ஆட்சியாளர்களின் தயவில்தான் அவர் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்.

உள்ளாட்சித் தேர்தல்கள், மாகாண சபை தேர்தல்களைக் கூட முறையான காலகட்டத்தில் நடத்தாமல் நீண்ட காலமாக இழுத்தடித்துக் கொண்டு வருகிறார். மொத்தத்தில் தேர்தல் நடந்தால் ஆட்சியாளர்கள் தோல்வியடைவர் என்பது நிதர்சனமான உண்மை.

மொத்தத்தில் இவ்வளவு பெரிய பொருளாதாரச் சிக்கல்களுக்கு இடையிலும் பொதுமக்களின் மிகப்பெரிய அதிருப்திகளுக்கு இடையிலும் தமக்கு இருக்கும் போலியான பெரும்பான்மை பலத்தை கொண்டு ஆட்சியை அவர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் சொல்ல முடியும்.

இந்தப் பின்னணியில், நாட்டில் நிலவி வரும் இந்தப் பொருளாதாரச் சிக்கல் காரணமாக, சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளின் அடிப்படையில் – மின்சாரம், குடிநீர், வரி வகைகள் உள்ளிட்ட அனைத்திலும் கட்டணங்கள் அதிகரித்து, அதனால் பொதுமக்களுக்கு பெரும் அதிருப்தி ஏற்பட்டு இருக்கிறது.

இவ்வாறிருக்க, அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலையும் நடத்த வேண்டிய கட்டாயத்தில் நாடு இருந்து கொண்டிருக்கிறது. அப்படி நடக்கிறபோது இந்த நாட்டில் ஓர் ஆட்சி மாற்றம் நிகழலாம் என்பது எதிர்கட்சிகளின் நம்பிக்கையாக இருக்கிறது. ஆயினும், எதிர்க்கட்சிகள் இரண்டு மூன்று பிரிவுகளாக இருக்கிற நிலையில் சஜித் பிரேமதாச தலைமையிலான அணிக்கும், ஜேவிபி அணிக்கும் இடையில் பலத்த போட்டி நிலவும் என்றும் அறிய முடிகிறது.

கேள்வி: முன்கூட்டியே பாராளுமன்றத் தேர்தல் வர வாய்ப்பு இருக்கிறதா அல்லது இப்போதைய அரசின் பதவிக்காலம் முடிந்து, அடுத்த ஆண்டுதான் முறைப்படி தேர்தல் நடத்தப்படுமா?

பதில்:முன்கூட்டியே தேர்தலை நடத்துவது என்றால், தற்போதைய பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு தேர்தலை அறிவிப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கிறது. ஆனால் அதற்கு அவர் துணிவரா என்பதுதான் மிகப்பெரிய கேள்வியாக இருக்கிறது. அடுத்த வரவு செலவு திட்டத்தில், தனக்கு எதிராக முந்தைய ஆட்சியாளர்கள் வாக்களிப்பார்கள் என்ற அச்சம் ஏற்பட்டால், தற்போதைய பாராளுமன்றத்தைக் கலைக்கும் முடிவுக்கும் அவர் வரலாம் என்று ஒரு யூகமும் நிலவுகிறது.

கேள்வி: அப்படி தேர்தல் வந்தால் உங்களது நிலைமை எப்படி இருக்கும்?

பதில்: தற்போது நாங்கள் ஓர் அரசியல் கட்சியாக ஒரு கூட்டணியில் அங்கம் வகிக்கிறோம். எனவே, அந்தக் கூட்டணியின் இணைந்தும் போட்டியிட வாய்ப்பு இருக்கிறது அல்லது சில பல இடங்களில் தனித்துப் போட்டியிடவும் வாய்ப்பு இருக்கிறது. மொத்தத்தில் தேர்தலைச் சந்திப்பதற்கு நாங்கள் ஆயத்தமாகவே இருக்கிறோம்.

கேள்வி: தேர்தல் வந்தால் தற்போது எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசா தலைமையிலான அணியில் அங்கம் வகிப்பீர்களா அல்லது தற்போதைய அதிபர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அணியில் இடம்பெறுவீர்களா?

பதில்: தற்போது எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசா தலைமையிலான கூட்டணியில் அங்கம் வகிப்பதற்குதான் பெருவாரியான வாய்ப்பு இருந்து கொண்டிருக்கிறது. என்றாலும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மக்களின் ஆதரவு குறையும் வாய்ப்பு உள்ளது என்கிற நிலையில் – அவரையும், சஜித்தையும் ஒரே கூட்டணியில் ஒன்றிணைத்து தேர்தல் களத்தைக் காண்பதற்கான சில முயற்சிகளையும் நாங்கள் மேற்கொண்டு வருகிறோம்.

> தற்போது எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசா தலைமையிலான கூட்டணியில் அங்கம் வகிப்பதற்குதான் பெருவாரியான வாய்ப்பு இருந்து கொண்டிருக்கிறது. என்றாலும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மக்களின் ஆதரவு குறையும் வாய்ப்பு உள்ளது என்கிற நிலையில் – அவரையும், சஜித்தையும் ஒரே கூட்டணியில் ஒன்றிணைத்து தேர்தல் களத்தைக் காண்பதற்கான சில முயற்சிகளையும் நாங்கள் மேற்கொண்டு வருகிறோம்.

கேள்வி: அப்படியென்றால், தேர்தல் அறிவிக்கப்பட்ட பிறகுதான் உங்கள் கூட்டணி குறித்த தெளிவான நிலைப்பாடு தெரியவரும் என்று கூறுகிறீர்களா?

பதில்: அப்படியில்லை. வழமையாகவே நாங்கள் எந்தக் கூட்டணியுடன் தற்போது சார்ந்து இருக்கிறோமோ அதே அணியுடன் போட்டியிடும் வாய்ப்புதான் அதிகம். என்றாலும் ஓர் அரசியல் கட்சி – அதுவும் சிறுபான்மை அரசியல் கட்சி என்ற அடிப்படையில், எந்த ஒரு தெளிவான முடிவையும் சற்று தாமதித்து எடுக்கக்கூடிய சூழல்தான் எல்லோருக்கும் இருக்கிறது. அதிலும் ஆசன ஒதுக்கீடுகள் குறித்த சிக்கல்களில் தெளிவான ஒரு நிலைப்பாட்டைக் கண்ட பிறகுதான் கூட்டணி குறித்து தெளிவான நிலைப்பாட்டை நாங்கள் எடுக்க முடியும்.

கேள்வி: தமிழ் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ் அமைப்புகளுடன் இணைந்து பயணித்துக் கொண்டிருக்கிறீர்கள். அரசியல் ரீதியாக அவர்களின் கருத்தும், உங்களின் கருத்தும் ஒத்துப் போகின்றதா?

பதில்: பெரும்பாலும் பல தருணங்களில் பொதுவான பிரச்சினைகளில் நாங்கள் ஒத்த கருத்துடன்தான் இருந்து வருகிறோம். சிறுபான்மையினருக்கு இடையிலான பல்வேறு பிரச்சினைகள், நாட்டின் அரசியலமைப்பு சட்டத் திருத்தம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களில் நாங்கள் உடன்பட்ட செயல்பாட்டுடன்தான் இருந்து வருகிறோம்.

கேள்வி: அடுத்த ஆட்சி சஜித் பிரேமதாசா தலைமையில் வந்தால் இந்தப் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படுமா?

பதில்: நிரந்தரத் தீர்வை பெறுவதற்காக எல்லாக் கோணங்களிலும் நாங்கள் எங்கள் முயற்சியை மேற்கொள்வோம். அனைத்து தரப்பு மக்களின் நியாயமான உணர்வுகள், கோரிக்கைகள் உள்ளிட்ட அனைத்தையும் நிறைவேற்றி, அனைத்து தரப்பினரின் திருப்தியையும் பெறக்கூடிய அளவில் எங்களது நடவடிக்கைகள் அமையும்.

கேள்வி: எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசர் அவர்களை ஆதரித்து பகிரங்கமாகவே நீங்கள் கருத்து தெரிவித்து வருகிறீர்கள்… வரும் நாடாளுமன்றத் தேர்தலையடுத்து, ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு அவர் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்க வாய்ப்பு இருக்கிறதா?

பதில்: நிச்சயமாக! அதற்குச் சாதகமான அரசியல் சூழல் உருவாகி வருகிறது. இதற்கு முன்பு நடைபெற்ற அதிபர் தேர்தலிலும் அவர் போட்டியிட்டு, கிட்டத்தட்ட 55 லட்சம் வாக்குகளைப் பெற்றிருக்கிறார். இம்முறை நடைபெறும் பாராளுமன்றத் தேர்தலில் மும்முனைப் போட்டி என்று வராமல், இருமுனை போட்டியாக இருந்தால் நிச்சயமாக அவர் சார்ந்த கூட்டணி வெற்றி பெற்று, அவர் அதிபராகும் வாய்ப்பு பிரகாசமாகவே இருக்கிறது என்பது எமது அபிப்பிராயம் இவ்வாறு ரவூப் ஹக்கீம் சிறப்பு பேட்டியில் கூறினார்.

# பொம்புள -02

"பொம்புள" பத்தியில் முஸ்லிம் சமூகத்து பெண்களின் பிரச்சனைகள் குறித்து அலசவுள்ளேன்.



- ஷாமிலா செரீப் -

எனக்கு நன்கு நினைவிருக்கிறது நான் ஆறாந்தரத்தில் கற்கும் போது "சந்தைக்கு பக்கத்துல தான் அந்த பொம்புளட வீடு. அவட வீட்ட யாரோ அடிக்கடி வந்து போவதாம் அதனால பள்ளி ஆக்கள் அவட வீட்ட போய் இஸ்லாமிய முறைப்படி தண்டனை வழங்க பள்ளிக்கு கூப்பிட்டதாம் ஹத்து அடிச்சயாம்"என்று பேசிக்கொண்டார்கள்

பின்னொரு காலத்தில் ஒன்பதாம் வகுப்பு படிக்கையில் என நினைக்கிறேன் பக்கத்து ஊரில் ஒரு பொம்புளட வீட்ட ஓர் ஆண் வந்து போவதாகவும் அதனை கையும் களவுமாக பிடித்த ஆக்கள் பள்ளிவாயல் சம்மேளனத்த கூப்பிட்டு காவின் எழதச்சொல்லி அவர்களை சட்டப்படி திருமண பந்தத்தில் இணைத்து வைத்ததாகவும் அறிந்தேன்.

சாதாரண தரம் படிக்கும் பொழுது காதலிப்பதே மிகப்பெரிய குற்றம் என்று பாடசாலை ஆசிரியர்களின் நடவடிக்கைகளை வைத்து அறிந்து கொண்டேன். நான் வேற வாயாடி என்பதனால் என்னைக்காதலிக்க பயப்பட்டிருப்பானுகள் போலும் எனவே அந்த மாதிரி புரபோசல் எதுவும் வரவில்லை.

உயர் தரம் கற்கும் பொழுது என் நண்பியின் பக்கத்து வீட்டுக்கு மெனேஜரின் மகன் வந்து போவார். அவர்கள் இருவரும் காதலிப்பதாக நண்பி சொன்னாள். அந்த பக்கத்து வீட்டுப்பிள்ளை தவறிழைத்தாக கூறி அந்த பிரதேச பள்ளிவாயல் சபை ஆக்கள் வந்து அவளை விசாரித்து விட்டுச் சென்றதால் அவமானம் தாங்காமல் அவள் மத்திய கிழக்குக்கு பணிப்பெண்ணாகச் சென்றாள்.

கல்வியியல் கல்லூரியில் கற்கும் காலத்தில் எங்கள் கல்லூரியைச் சேர்ந்த 10 மாணவிகள் காலி கடற்கரையில் கால்களை நனைத்து விளையாடியதை "உங்கள் கல்லூரிப் பெண்கள் கடற்கரையில் குளிக்கிறார்கள்" என பள்ளிவாசல் தலைவர் தொலைபேசி மூலம் வழங்கிய தகவலை அடுத்து குறித்த மாணவிகள் கல்லூரி நிறுவாகத்தினால் பல விசாரணைகளுக்குட்பட்டு பிறகு எச்சரித்து கற்கையை தொடர அனுமதிக்கப்பட்டனர்.ஆனாலும் அந்த மாணவிகள் மன உளைச்சலுக்கு ஆளானார்கள்.

2007 காலப்பகுதியில் ஓட்டமாவடியில் அதிகாலையில் மகளிர் கல்லூரிக்கு அருகே ஒரு இளம் பெண் சுட்டுக்கொல்லப்பட்டாள்.

நான் உயர்தரத்தை மகளிர்பாடசாலையிலும் கற்பித்தலில் தேசிய டிப்ளோமாவினை மகளிர் கல்வியியல் கல்லூரியிலும் பின் கட்டுறுப்பயில்வினை மகளிர் பாடசாலையிலும் பயின்றேன்.குறிப்பிட்ட இக்காலங்களில் முஸ்லிம் பெண்கள் எத்தகைய பிரச்சனைகளை சவால்களை அநீதிகளை துஸ்பிரயோகங்களை எதிர்கொள்கிறார்கள் என அறிவேன்.

பிற்பட்ட காலங்களில் ஓர் ஊடகவியலாளராக பெண்களின் பிரச்சனைகளை ஆராய முற்பட்ட போது விதவைப்பெண்கள் எதிர் கொள்ளும் எண்ணிலடங்கா பிரச்சனைகளை சவால்களை அறிந்தேன். இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் ஒன்றியம் தயாரித்தளித்த நிகழ்ச்சி ஒன்றிற்காக முஸ்லிம் பெண்களுக் கெதிரான வன்முறைகளை ஆய்வு செய்த போது,கணவனைப்பிரிந்த விதவைப்பெண்கள் சிலர் காதிநீதிபதிகளினால் ஒரு பிச்சைக்காரி யை விடக்கேவலமாக நடாத்தப்படுவதனை கேள்வியுற்றேன். மேன்முறையீட்டுக்கு வந்த பெண்களின் வாக்குமூலங்களை பதிவு செய்தேன்.

குடுப்பத்துக்குள் உறவினர்களுக்குள் நண்பர்களுக்குள் பெண்களுக்கு நடக்கும் அநீதிகளைக் கண்டும் காணதது போல் இஸ்லாமிய சட்டங்களை பெண்கள் மீதே திணித்துப்பழகிப்போன சிலருக்கோ பலருக்கோ இந்த பதிவு பிடிக்காதிருக்கலாம் பாவம் அவர்கள்.

நிற்க..

நான் சாதாரண தரம் படிக்கும் பொழுது எங்கள் தெருவின் தூரத்தே அவர்கள் வீடமைந்திருந்தது. அஹமதாசியார்ட தோட்டத்தில சூதாடுவாங்க.சிகரட் குடிப்பாங்க. அந்த ராத்தா வெளிநாட்டிலிருந்து அனுப்பும் பணத்தினை அவர் சேமிக்கவும் இல்ல யாருக்கும் கொடுக்கவுமில்ல என்பதனை பின்னாட்களில் நடந்த சண்டையின் போது அறிந்து கொண்டேன்.

நான் உயர்தரம் படிக்கையில் மட்டக்களப்பு டவுனுக்கு போயிட்டு ஊருக்கு திரும்பி வரும் போது உம்மாவிடம் கேட்டேன்

"ஏன் உம்மா நம்மட ஆக்கள் இந்த பக்கம் கிடந்து வாறாங்க?"

"அங்கால பக்கம் தான் சாரயத் தவறனை இருக்கு குடிச்சிட்டு வாறாங்க"

"இந்த விசயம் பள்ளி ஆக்களுக்கு தெரியாதா உம்மா?"

"ஏன் தெரியாது? பேசாம வா".

கொழும்பில் கல்வி நிறுவனமொன்றில் கற்பிக்கையில் சமய பாட ஆசிரியர் மாணவனொருவனை துஸ்பிரயோகம் செய்தார் .அதைப்பற்றி குறித்த நிறுவனத்துக்கு தலைமை வகித்தவருடன் குறிப்பிட்ட போது "பொண்டாட்டி ஊர்ல புள்ளப்பெத்திருந்தா கொழும்புல தனியா இருக்கிறவரு தவறிழைப்பது சகஜம்.நீங்க பேசாம உங்கட வேலயப்பாருங்க.எல்லோரும் தெரிந்தும் சும்மா இருக்கக்க உங்களுக்குமட்டுமென்ன பிரச்சனை ?"

வீட்ட வந்து கணவனிடம் சொன்னேன் "உமர் வரனும் சாட்டையை கையிலெடுக்கனும்"என்றார்

எனக்கு திருமணமாகி இரண்டு குழந்தைகளும் உள்ளனர்.என்னுடன் கல்லூ ரியில் கற்ற நண்பிகள் சிலருக்கு இன்னும் திருமணமே ஆகல.ஆம்பளைங்க எதிர்பார்க்கின்ற தகைமைகள் ளுடைஅ,கயசை, இரண்டுமில்லாட்டி காசு இருக்கனும்.இது மூன்றுமில்லாதவர்களுக்கு வாழ்வு கொடுக்க யாருளர்?

**தொடர்வாள்...**

## 2013 ஒக்டோபர் 15 அன்று உதயம் பத்திரிகை வெளியீட்டு வைபவம் கொழும்பில் இடம்பெற்றது. அதன்போது எடுக்கப்பட்ட சில படங்கள்...












## மனநலமும் ஆலோசனையும் 02

# அவசர வாழ்க்கை

**எமது கடந்த இதழில் அவசரம் பற்றி பார்த்தோம். இன்றைய இதழில் அவசர வாழ்க்கை பற்றி பார்ப்போம்.**

நம்மில் பலர் அவசர வாழ்க்கை வாழ்கிறார்கள். நாங்கள் தொடர்ந்து பிஸியாக இருக்கிறோம்

நாம் சோர்வடைந்தாலும் பணியை தொடர்கிறோம்

ஓடி ஓடி உழைக்கிறோம் என்று மக்கள் உயர்ந்த குரலில் கூறுகிறார்கள். ஆனால் இந்த ஓட்டமமான, அவசரமான வாழ்க்கையின் உள்ளே எத்தனை வலியும் பதற்றமும் இருக்கிறது என்பது நம்மில் எத்தனை பேர் தெரிந்து இருக்கிறார்கள் என்பதுதான் மிகப் பெரிய கேள்வி.

நாம் ஏன் இவ்வளவு அவசரப்படுகிறோம்? நமது பிஸியான மற்றும் அவசரமான வாழ்க்கை நல்ல பலனைத் தரும் என்று நாம் எப்போதாவது யோசிக்க மாட்டார்கள். அதேநேரம்

வேகமாகச் செல்லாதவர்களை பார்த்து அவர்கள் போதுமான அளவு உழைப்பதில்லை என்றும் நினைப்பார்கள். அவர்களை பார்த்து பல கதைகள் கட்டுவார்கள்.

ஆனால் யாரும் ஒவ்வொரு நிமிடமும் 80 மைல் வேகத்தில் தங்கள் வாகனத்தை ஓட்டுவதில்லை. அப்படி ஓட்டினால் அது அபார விபத்துக்குக் காரணம் என்று தெரியும்.

அவசரமான வாழ்க்கை முறை தொலைதூரத்திலிருந்து பார்க்கும் போது கவர்ச்சியாகத் தோன்றலாம்.

பல வேலை கலாச்சாரங்கள் அவசரம் என்பதை உற்பத்தித்திறனின் அடையாளம் என்று கூறினாலும், உண்மையில், அவசரம் இலக்கை நோக்கியதாக இருப்பது பொருத்தமற்றது என்பது இதன் பொருள் அல்ல. ஆனால் வாழ்வில் சமநிலை முக்கியமானது." என்பதே இங்கு கருத்தில் கொள்ள வேண்டியது.

நாம் சமநிலையான வாழ்க்கையைப் பின்பற்றாமல், அவசரமான வாழ்க்கையைத் தொடர்ந்து பின்பற்றினால், அது அவசர நோய்க்கு வழிவகுக்கும்.

அவசரம் என்பது ஒரு போதைப்பொருளைப் போன்றது, அது நீங்கள் விரும்பும் அனைத்தையும் சிதைத்து, நீங்கள் இருக்க விரும்பாத நபராக உங்களை ஆக்கிவிடும்.

அவசரம் மற்றும் பிஸியாக இருப்பது ஒரு நாள்பட்ட பிரச்சனையாக மாறி சிலசமயம் அதிலிருந்து விடுபட



நினைத்திருக்கிறோமா?

இன்று நம்மில் பலர் ஒரு வேலையில் குதித்து அதை வேகமாக முடிக்க முயற்சி செய்கிறோம். அவசரப்படுகிறோம். ஆனால் வேகம் அல்லது அவசரம் ஒரு போதை என்பதை அறிந்தே மறந்து விடுகிறோம்.

ஒரு வேலையை செய்ததும் "நான் மிக அவசரமாக செய்து முடித்துவிட்டேன்" என்று மக்கள் மகிழ்ச்சியுடன் கூறுகிறார்கள். அவர்கள் அதை பெருமையாகவும் நினைக்கிறார்கள்.

8 மணி நேர வேலையை 4 மணி நேரத்தில் செய்து முடிப்பது பலருக்கு சுவாரஸ்யமாக இருக்கலாம். அது தங்கத்தின் தரத்தை விட பெருமதியாக தெரியலாம்.

ஆனால் இந்த அவசரம் எவ்வளவு காலம் நீடிக்கும்? இந்த அவசரத்துக்கு உள்ளை என்னவெல்லாம் இருக்கும் என்று அந்த நேரத்தில் பெரும்பாலும் பயம், பதட்டம் மற்றும் முடிக்க வேண்டும் என்ற உணர்வு ஆகியவற்றில் வேரூன்றியுள்ளது என்பதே உண்மையாகும்.

டாக்டர் மைக்கேல் ஆஷ்வொர்த் கூறுகையில், அவசரமான வாழ்க்கை முறையை வாழ்பவர்கள் "எதிர்காலத்தில் வாழ்கிறார்கள், நிகழ்காலத்தில் வாழ்வதில்லை. வாழ்க்கையின் பாதையில் ரோஜாக்களை அவர்கள் அரிதாகவே கவனிக்கிறார்கள், ஏனெனில் அவர்களின் கண்கள் எப்போதும் இலக்கை நோக்கியே இருக்கும். இதனால், அவர்கள் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர். முடியாமல் அவதிப்பட வைக்கலாம்.

அதிலிருந்து வெளிவருவதற்கான சரியான காரணங்களை நாம் கையாளும் வரை அது நம்மை விட்டுப் போகாது. காலப்போக்கில் இந்த அவசர வாழ்க்கை ஒரு சுமக்க முடியாத சுமையாக ஆகலாம் .

"எமது வாழ்க்கையில் சமநிலை இல்லாவிட்டால்.. வாழ்க்கையின் கவலைகளால் எம் இதயங்கள் மூடப்பட்டுவிடும். அதைத் திறக்க ஒரு திறவுகோலை உருவாக்காவிட்டால், அது எப்போதும் மூடப்பட்ட கதவாகவே இருக்கும்.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

# 2023 ஆம் ஆண்டுக்கான "யாழ் முஸ்லிம் சமூக ஜோதி" விருது



முதல் முறையாக மூவருக்கு வழங்கப்படவுள்ளது என்பதை யாழ் முஸ்லிம் சமூக ஊடகம் நிர்வாகி கலாபூஷணம் பரீட் இக்பால் தெரிவிக்கிறார்.

யாழ் முஸ்லிம் சமூக ஜோதி விருதுக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான ஆர். எம். இமாம், சமூகப்பற்றுள்ள கல்வியியலாளர் எம்.எஸ்.ஏ.எம். முஹ்தார், இலக்கியவாதி ஏ.சி. நஜிமுத்தீன் ஆகிய மூவரும் ஆவார்கள்.

விருது வழங்கலுக்கு முன்னாள் வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசிய தலைவர் அல்ஹாஜ் எம்.எஸ். றஹீம் அவர்கள் அனுசரணை வழங்குகிறார்.

# கல்முனை பிரதேசத்தில் பிடிக்கப்படும் மீன்கள் தேவையுடையோருக்கு இலவசமாக வழங்கப்பட்டது







(எம்மையெம் அஸ்ஹர்)

கல்முனை,சாய்ந்தமருது மற்றும் மாளிகைக்காடு ஆகிய பிரதேசங்களில் கடந்த சில தினங்களாக அதிகளவில் கரைவலை மீனவர்களால் மீன்கள் பிடிக்கப்படுவதால் பிரதேசமெங்கும் கடல் மீன்கள் மிகவும் மலிவான விலைக்கு விற்கப்படுகின்றன.

இந்த விலைக்கும் கூட மீனை வாங்கி சமைத்து உட்கொள்ள முடியாமல் வறுமை நிலையிலுள்ள நாளாந்த கூலி வேலை செய்து தமது ஜீவனோபாயத்தை கடத்தும் அம்பாறை மாவட்டத்தின் மிகவும் கஷ்டமான பிரதேசமான வளத்தாப்பிட்டி மற்றும் இஸ்மாயில் புரம் ஆகியவற்றில் வாழும் தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள குடும்பங்களைச் சேர்ந்த மக்களுக்கு கல்முனையைச் சேர்ந்த பரோபகாரியொருவர் மீன்களை கொள்வனவு செய்து தனது டிப்பர் வாகனத்தில் ஏழை மக்களின் காலடிக்கு சென்று இலவசமாக வழங்கி வருகின்றார்.

இம் மீன்களை கொள்வனவு செய்வதற்காக அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் பல்வேறு பிரதேசங்களிலுமிருந்தும் மாளிகைக்காடு மீன் சந்தைக்கு பலர் வருகை தருகின்றனர்.

கீரி மீன் கிலோ நூறு ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதால் மக்கள் அதிகளவில் கொள்வனவு செய்து கருவாடாக்குவதில் கூடிய ஈடுபாடு காட்டி வருகின்றனர்.

மழைகாலமாக இருப்பதால் வெயிலைவிட விறகு பயன்படுத்தி மீனை கருவாடாக்கும் முயற்சியில் ஈடுபடுகின்றனர்.

# தல்கஸ்பிட்டியவின் முன்னாள் பிரதி அதிபர் அபூசஹீத் காலமானார்



ஓய்வு பெற்ற பிரதி அதிபரும் முன்னாள் அரநாயக இணக்க சபைத் தலைவருமான அல்ஹாஜ் அபூசஹீத் வெள்ளியன்று காலமானார்.

தல்கஸ்பிட்டிய முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நீண்ட காலம ஆசிரியராகவும் அதிபராகவும் பணிபுரிந்த அபூசஹீத், தல்கஸ்பிட்டிய பள்ளிப்பரிபாலன சபைத் தலைவராகவும் பணியாற்றினார். அவருடைய ஜனாஸா வெள்ளிக்கிழமை மாலை பெருந்திரளானோரது பிரசன்னத்துடன் தல்கஸ்பிட்டிய ஜு/ம்ஆப் பள்ளிவாசலில் நல்லடக்கம் செய்யப்பட்டது

தல்கஸ்பிட்டிய கிராமத்தில் ஆரம்பகால ஆசிரியர்களில் ஒருவரான இவர், தல்கஸ்பிட்டிய கிராமத்தின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றிய ஒருவராகவும் காணப்படுகின்றார்.

# உதயம் வாழி!

புதியதொரு வரவாக உதயம் என்றோர்
பத்திரிகை வந்துளது இலங்கை மண்ணில்
அதியுயர்வாம் தமிழ்மொழிக்கே ஆதரிப்போம்
ஆக்கங்கள் தந்திடுவோம் அரவணைப்போம்
உதவிக்கரம் தந்திடுதல் வேண்டும் செய்தி
உலகறியப் பக்கபலம் அளித்தல் வேண்டும்
வதிபுலத்துச் செய்திகளும் வேற்று நாட்டின்
வரலாற்று நிகழ்வுகளும் தேர்வோம் வாழி!

துறைசார்ந்த வித்தகராம் அமீனே ஆசான்
தலைமைக்குள் இளையவர்கள் தொண்டு செய்வார்
நிறைகுடம்போல் ஆகுமெனில் ஐயம் இல்லை
நாட்டுக்கும் வேண்டியது நலமே சேர்க்கும்
அறிவுக்கும் விருந்தளிக்கும் அஃதே போன்றே
அன்றாட நிகழ்வுகளும் கோத்த ளிக்கும்
திறன்கொண்ட(து) ஆகட்டும் தோள்கொடுப்போம்
தனியவனின் அருள்சேர்க வாழி! வாழி!

- ஜின்னாஹ் -

# ‘பலஸ்தீனத்தில் நடப்பது என்ன?’ திறந்த கலந்துரையாடல்





(அஷ்ரப் ஏ சமத்)

கடந்த 19.10.2023 வியாழக்கிழமை மருதானை சி.எஸ்.ஆர் மண்டபத்தில் ஸ்ரீலங்கா ஜேணலிஸ்ட் குலோபல் ஜஸ்டிசி என்ற அமைப்பினால் பலஸ்தீனத்தில் நடப்பது என்ன என்ற ஊடகவியலளர்கள் திறந்த கலந்துறையாடல் ஒன்று நடைபெற்றது.

இந் நிகழ்வுக்கு சன்டே டைம் ஆங்கில பத்திரிகையின் பிரதி ஆசிரியர் சிரேஷ்ட ஊடகவியலாளர் அமீன் இஸ்ஸதீன், சிரேஸ்ட ஊடகவியலாளர் லத்தீப் பாருக், மகிந்த கெட்டிகே தலைமையில் இக் கலந்துரையாடல் நடைபெற்றது. இந் நிகழ்வில் இலங்கையில் உள்ள பலஸ்தீன் தூதுவர் கலாநிதி சுகையிர் செய்யட் மற்றும் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.ஶ்ரீ

இங்கு உரையாற்றிய பலஸ்தீன் தூதுவர் கருத்துத் தெரிவிக்கையில்,

பலஸ்தீன் நாடு ஒரு சீரிய முறையில் ஒரே நாடு என்ற ரீதியில் நிம்மதியாக வாழ்வதற்கு எவ்வளவு நாம் விட்டுக் கொடுத்தும். ஒரு கலந்துரையாடலுக்கு வந்தோம். அந்த மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கு இந்த உலகில் யாறும் முன்வருவதில்லை. எங்களுக்கு உதவுவதற்கு அமேரிக்கா போன்ற பெரிய நாடுகள் இல்லை. ஏனைய நாடுகளும் உதவ இல்லை. நாங்கள் எங்கள் சொந்தக் காலில் நின்று கொண்டே நாங்கள் நாளாந்தம் மடிந்து வாழ்கின்றோம். எனது சொந்தக் காணியை கூட இழந்த நிலையில் தான் நான் உள்ளேன். கடந்த 75 வருடங்களாக யூதர்களுடன் நாடற்றவர்கள் எமது நாட்டினை ஆக்கிரமித்துக் கொண்டு அவர்களுக்கு பிரிட்டன், அமெரிக்கா உதவியுடன் தங்களது சுய பூமியை பிடித்துக் எமது மக்களையும் சொத்துக்களையும் மக்கள் குழந்தைகள் பெண்கள் என அழித்துக் கொண்டு வருகின்றனர். ஆனால் பலஸ்தீனர்கள் இறுதி மூச்சு இறுக்கும் வரை அந்த மண்ணில் இறுதி பலஸ்தீனர் வரை நாம் போராடி மடிவோம்..... எமது பாலஸ்தீன சுதந்திரத்திற்கு கடந்த காலங்களில் இலங்கையில் மக்கள் ஆதரவு தெரிவித்து வந்தனர். அவர்கள் இன்றும் பலஸ்தீன் விடயத்தில் ஆதரவாக உள்ளதையிட்டு நான் நன்றி தெரிவிக்கிறேன். எனக் கூறினார்

இங்கு உரையாற்றிய ஊடகவியலாளர் லத்தீப் பாருக் ....

இலங்கையில் கடந்த காலங்களில் இஸ்ரவேலருக்கு உள் வந்து அலுவலகங்களை திறப்பதற்கும் கடந்த கால அரசு ஆதரவளித்தது. அவர்கள் எமது பாதுகாப்புப் படையினருக்கு பயிற்சி அளித்து விட்டு அடுத்த கட்டத்தில் விடுதலைப்புலிகளுக்கு பயிற்சி அளித்தார்கள்... அவர்களுக்கு அமெரிக்கா உதவினாலும் அவர்களுக்கு இதே முறையில் கெடுதி செய்பவர்கள். எமது நாட்டில் உள்ள சிங்கள சமுகம் கூட பலஸ்தீன் போர் கொடுப்பவர்களை பயங்கரவாதிகள் என அவர்கள் நேரடியாக சமுக சேவை ஊடகங்களில் சொல்லி வருகின்றனர். கடந்த 4 தசாப்தங்களாக நாம் மத்திய கிழக்கு நாடுகளுக்கு 10 லட்சத்திற்கும் மேற்பட் டார் சென்று தொழில் செய்து உழைத்து எமது நாட்டுக்கு அனுப்பியதை மறந்து விட்டார்கள்.... பலஸ்தீன் நாட்டினை இஸ்ரேவேலர் ஆக்கிரமித்திருப்பதையும். .உலகில் நாடற்றவர்களாக வாழ்ந்தவர்களுக்கு பிரிட்டன் அமெரிக்காவும் இணைந்து இஸ்ரேவேல் என நாட்டினை அங்கிகரித்துக் கொடுத்து அவர்கள் முழு மத்திய கிழக்கு நாடுகளையும அழித்து சிறுவர்களையும் பெண்களையும்,. வைத்தியசாலைகள் உளள் நோயாளிகளையும் அழித்து கொான்று இரத்தம் குடிக்கும் பிசாசுகள் என அவர் அங்கு உரையாற்றினார்






எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist,
Chennai - Tamilnadu, India)



# மோடியை தோற்கடிக்கும் வியூகங்கள் வெற்றி பெறுமா?

இந்தியா என்கிற தேசம் சர்வதேச அளவில் அதிக ஆதிக்கம் செலுத்தும் நாடுகளில் ஒன்றாக மாறி விடுவதை நாம் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும். ஆசிய பிராந்தியத்தில் இந்தியா மற்றும் சீனா மிகுந்த பலமான ராணுவம் மற்றும் பொருளாதார கட்டமைப்பை அடிப்படையாக கொண்ட தேசங்களாக உள்ள நிலையில் இந்த இரண்டு நாடுகளின் முக்கியத்துவம் இல்லாமல் உலகம் இல்லை என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் .

இந்தியா , என்கிற தேசம் எல்லா நிலைகளிலும் வளர்ந்து வரும் சூழ்நிலையில் அதன் தேசிய தலைமை எப்படி இருக்க வேண்டும் என்பது தான் முக்கியம் என்பதே உண்மையாகும். இந்தியா ஒரு பனமூக கலாச்சார தேசம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது , பல்வேறு மதங்களின் நம்பிக்கை , கலாச்சாரம் , நாகரீகம் , உணவு பழக்கம் மற்றும் மாறுபட்ட சீதோஷ்ண நிலைகளைக் கொண்ட ஒரு தேசத்தின் தலைவர் அனைவருக்குமான நபராக இருக்க வேண்டும் என்பது தான் எழுதப்படாத விதி என்பதில் எந்த ஐயமும் இல்லை. ஆனால் , 2014 ம் ஆண்டிற்கு பிறகு இந்தியாவின் இந்த நிறம் மாறி வருவதைக் நாம் தெளிவாக அவதானிக்க முடிகிறது. ஆம்... இந்தியாவில் ஆட்சி செய்து வரும் இந்து தேசிய தலைமை அதாவது பிரதமர் மோடி ஆட்சி இந்தியாவை முழுமையாக இந்து கலாசார தேசமாக மாற்றும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவது தெளிவான ஒன்றாக இருந்து வருகிறது. இது தான் இந்திய அரசியலில் மிகப் பெரிய அளவில் சிக்கலை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது என்பதே யதார்த்தமான உண்மையாகும்.

2014 பிரதமர் நரேந்திர மோடி ஆட்சியில் நடைபெற்ற பல்வேறு சம்பவங்கள் இந்தியாவில் வாழும் மத சிறுபான்மையினர் மத்தியில் மிகுந்த அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது தான் மறுக்க முடியாத உண்மையாகும். ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் தாய் அமைப்பான ஆர் எஸ் எஸ் அமைப்பின் முழுமையான கண்காணிப்பின் கீழ் தான் பாரதிய ஜனதா கட்சி இயங்கும் வகையில் செயல்பாடுகள் திட்டமிட்டு வடிவமைப்பு செய்யப்படுகிறது.

1925 ம் ஆண்டு துவக்கப்பட்ட இந்த இயக்கம் ஒரு காலாச்சார தேசிய இயக்கம் என்று அந்த அமைப்பின் மூத்த தலைவர்கள் புகழுராம் சூட்டிக் கொள்வதை நாம் தெளிவாக அறிந்து கொள்ள முற்பட வேண்டும். இந்த கலாசார தேசிய இயக்கத்தின் நடவடிக்கைகளை கண்காணித்து வரும் பல்வேறு பிரிவினர் இவர்களின் திட்டம் ஒன்றுபட்ட இந்தியாவின் தேசிய மதமாக இந்து மதத்தை அறிவிப்பு செய்து விடுவது ஒன்றே என்று தொடர்ந்து கூறி வருகின்றனர் .

இந்தியாவின் பன்முகத்தன்மை அதாவது ளநஉரடயசளைஅ என்கிற வார்த்தையை நீக்கப்பட வேண்டும் என்பதே இந்துத்துவா மற்றும் பாரதிய ஜனதா கட்சியின் நோக்கமாக இருந்து வருகிறது. இந்தியாவில் 80 சதவீதமாக வாழ்ந்து வருகின்ற இந்துக்களுக்கு என்று உலகில் அடையாளம் காணப்படும் தேசமாக இந்தியாவை மாற்ற செய்ய வேண்டும் என்று அவர்கள் செயல்பட்டு வருகின்றனர்.

இந்தியாவில் கடந்த பல்வேறு தேர்தல்களில் பாரதிய ஜனதா கட்சியின் மேடை பேச்சாளர்கள் , செய்தி தொடர்பாளர்கள் , டெலிவிஷன் முகாமையாளர்கள், பத்ரிகை கட்டுரையாளர்கள் என்று ஒரு பெரிய கூட்டமே இந்ந பணியை தீவிரமாக ஈடுபட்டு வருவதைக் நாம் தெளிவாக அவதானிக்க முடிகின்றது. வெளிப்படையாகவே அவர்கள் கலாச்சார தேசியத்தை பேசி தேசிய அரசியலில் இதுவரை வெற்றி பெற்று வருவதும் கடந்த கால உண்மை என்பதில் எந்த மாறுபாடும் இல்லை. இந்த நடவடிக்கைகளினுடாகவே இந்திய அரசியலை ஆர் எஸ் எஸ் அமைப்பின் தலைமை முழுமையாக கட்டமைப்பு செய்து வருகிறது. மாநில ரீதியான செயல்படும் பல்வேறு அரசியல் கட்சிகளின் செயல்பாடுகளை முடக்க திறன் கொண்ட பல்வேறு நடவடிக்கைகளை அவர்கள் தொடர்ந்து எடுத்து வருவதைக் நாம் காணலாம்.

ஆர் எஸ் எஸ் அமைப்பின் தலைமை பிராமணர் நலனை மையப்படுத்தி பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதை பலர் வெளிப்படையாகவே குற்றம் சாட்டி வருவதைக் நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆர் எஸ் எஸ் அமைப்பு சமஸ்கிருதம், இந்தி மொழி பரவலாக்கம் கொண்ட ஒற்றை கலாசார தேசமாக இந்தியாவை மாற்ற தீவிர செயல்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர். அதற்காக அந்த இயக்கம் பயன்படுத்தும் வார்த்தை பிரையோகம் தான் இந்து என்கிற வார்த்தை. இந்து மதம் என்பது இந்தியாவை பொருத்தவரை ஒற்றை மதம் அல்ல. இந்தியாவில் ஆட்சி செய்த பிரிட்டிஷ் அரசு முஸ்லிம்கள் மற்றும் கிருஸ்தவ சமூகம் அல்லாத ஏனைய அணைத்து சாதிய பிரிவை உள்ளடக்கி இந்து மதம் என்று அறிவிப்பு செய்து விட்டனர். நிர்வாக ரீதியாக சிக்கலை தவிர்ப்பதற்காகவே இது போன்ற நடவடிக்கைகளை பிரிட்டிஷ் அரசு ஏற்படுத்தியது. இந்த வார்த்தை பயன்பாட்டை கவனமாகக் தனக்கு சாதகமாக எடுத்து கொண்ட ஆர் எஸ் எஸ் பிராமணர் அமைப்பு இந்தியா முழுவதையும் இந்து தேசம் என்று அறிக்கை செய்து வருவதைக் நாம் காணமுடிகிறது.இதற்காக அவர்கள் கையில் எடுத்து கொண்ட அரசியல் யுக்தி தான் முஸ்லிம் சமூக வெறுப்பு அரசியல். வட இந்திய இந்து சமூகத்தில் இஸ்லாமிய மத வெறுப்பை பல ஆண்டுகளாக ஆர் எஸ் எஸ் அமைப்பு திட்டமிட்டு செய்து வருவதைக் பலர் ஒப்புக்கொண்டு வருகின்றனர். குறிப்பாக உத்திரப் பிரதேசம், மத்திய பிரதேசம் , ராஜஸ்தான், இமாச்சலப் பிரதேசம், டெல்லி , ஹரியானா, மஹாராஷ்டிரா, பீஹார் , உத்ராஞ்சல் , சத்தீஸ்கர் என்று வட மாநிலங்கள் முழுவதும் இஸ்லாமிய வெறுப்பை உருவாக்கி பாரதிய ஜனதா கட்சி தொடர்ந்து தேர்தல் வெற்றியை பெற்று வருகிறது. இந்த வெற்றி வெறுப்பின் வெற்றியை தவிர வளர்ச்சியின் வெற்றியாக எம்மால் பார்க்க இயலவில்லை என்பதே உண்மையாகும்.

உண்மையில் இந்தியாவில் வாழும் இந்திய முஸ்லிம்களின் கலாச்சாரம், பண்பாடு , கல்வி, வேலைவாய்ப்பு என்கிற அணைததும் மண் சார்ந்த வாழ்க்கை முறை என்பதை நாம் தெளிவாக அறிந்து கொள்ள முற்பட வேண்டும். இந்து தேசிய சனாதன சக்திகள் முதலில் இஸ்லாமிய சமூகத்தின் மீது பல்வேறு வழிகளில் நவீன தீண்டாமை மற்றும் வெறுப்பை விதைத்து அரசியல் செய்ய பல்வேறு யுக்திகளை தொடர்ந்து கையாண்டு வருவது தான் ஆபத்தான அரசியலாக அனைவராலும் மிகுந்த கவலை பார்க்கப்படுகிறது. ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக மேற்கொள்ளப்படும் அனைத்து தெரு வீதி பிரச்சாரம் கூட்டங்களிலும் முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்பு பிரச்சாரம் முறையற்ற வகையில் கட்டவிழ்த்து விடப்படுகிறது. இதன் விளைவாக வளர்ந்து வருகின்ற இளம் குழந்தைகள் மற்றும் மாணவர்கள் , இளைஞர்கள் மத்தியில் முஸ்லிம்களை பற்றிய தவறான புரிதல் ஏற்பட்டு வருகிறது. இது தான் பாரதிய ஜனதா கட்சிக்கு மிகுந்த இலாபத்தை அரசியலில் நிரந்தரமாக உருவாக்கி விட்டது என்பதை தான் பல்வேறு சர்வதேச ஊடகங்கள் சுட்டி காட்ட தவறவில்லை. கடந்த 10 ஆண்டுகளில் நரேந்திர மோடி ஆட்சியில் இந்தியா பல்வேறு சிரமங்களை சந்தித்து வருகிறது.ஆனால் , சாதுர்யமாக பாரதிய ஜனதா மற்றும் ஆர் எஸ் எஸ் அமைப்பின் தலைமை மறைத்து விட அனைத்து வகையான முயற்சிகளையும் தாமதமின்றி எடுத்து நாம் கவனிக்க தவறவில்லை. பொதுவாக சமீபத்திய காலங்களில் இந்திய ஊடகங்கள் அனைத்தும் பாரதிய ஜனதா கட்சியின் வெறுப்பை வளர்க்கும் அரசியல், தவறான திட்டங்கள், மனிப்பூர் போன்ற மாநிலங்களில் பற்றி எரியும் உள்நாட்டு இனரீதியான கலவரங்களை கூட தொடர்ந்து விவாதிக்க தவறிவிட்டது குறிப்பிடத்தக்கது. ஏனெனில், அனைத்து ஊடகங்களும் பாரதிய ஜனதா கட்சியின் ஊது குழலாக மாறிவிட்டது என்பது அடிப்படை மரபுகளுக்கு அப்பாற்பட்ட நிலையை நோக்கி இந்திய ஊடகங்கள் பயணிப்பதாகவே நம்மால் உணர முடிகிறது. இரண்டாவது, பாரதிய ஜனதா கட்சி மாநிலங்களில் ஆட்சி செய்யும் அரசியல் கட்சிகளின் ஊழல்களை அம்பலப்படுத்துகிற வகையில் அணைத்து பிராந்திய கட்சிகளையும் மத்திய அரசின் ஏஜென்சிகள் மூலம் ஒருவிதமான அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கி வருவதைக் நாம் இந்திய அரசியலில் தினம், தினம் காணக்கூடிய ஒன்றாக மாறி விட்டது. பாரதிய ஜனதா கட்சியின் செய்தி தொடர்பாளர்கள் மூலம் மிகுந்த ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாக்கப்படும் எதிர் கட்சியினரை ஏதாவது வகையில் துறை ரீதியாக அச்சுறுத்தலுக்கு உட்படுத்தி நாடாளுமன்றத்தில் அவர்களுக்கு சாதகமாக நிறைவேற்றப்படும் மசோதாக்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுக்க வைக்க அவர்கள் முயற்சி செய்து பாரதிய ஜனதா இந்து தேசிய கட்சி வெற்றியும் பெற்று விடுவதை நாம் காணலாம். அதன் பின்னர் எந்த எதிர் கட்சியினரை பாஜக கடுமையான ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாக்கினார்களோ அவர்கள் அனைவர்களும் மிகுந்த புனிதர்களாக மாறி விடுவது மட்டும் அல்லாமல் அவர்களின் மீது பதிவு செய்யப்பட்ட பல பில்லியன் டாலர் குற்றச்சாட்டுகள் கூட இடம் தெரியாமல் மறைந்துவிடும் அவலம் தான் மோடியின் இந்து தேசிய கட்சியின் அரசியல் உட்கூறாக நம்மால் கவனிக்க முடிகிறது.

கடந்த 2019 ம் ஆண்டு நடைபெற்ற இந்திய நாடாளுமன்ற தேர்தலில் மோடி தலைமையிலான பாரதிய ஜனதா கட்சி பாகிஸ்தான் தீவிரவாதிகள் இந்தியாவில் நுழைந்து தாக்குதல் நடத்தியதாகவும் , தமது அரசு தான் இந்த மோசமான நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தும் வகையில் புல்வாமா பகுதிகளில் பாகிஸ்தானை எதிர்த்து போரிட்டதாக தகவலைப் பரப்பி மக்களிடையே மோடி ஒரு இந்து தேசியத்தின் ஹீரோ என்பது போலவே ஒரு மாயை ஏற்படுத்தி இரண்டாம் முறையாக அவர்கள் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்ததும் வரலாறாகும்.இதனை மோடியின் நம்பிக்கைக்கு பாத்திரமான கஷ்மீர் கவர்னராக செயல்பட்ட சத்யபால் மாலிக் பயங்கரமாக அதுவும் வெளிப்படையாகவே பிரதமர் மோடி மீது கடுமையான குற்றச்சாட்டுகளை பதிவு செய்து உள்ளார்.ஆனால் , இதற்கு எல்லாம் பாரதிய ஜனதா கட்சி தக்க பதிலை தராமல் இடம் பெயர்ந்து சென்றது தான் இந்திய அரசியலில் கேலிக்கூத்தான சம்பவமாக நம்மால் பார்க்கப்படுகிறது. இந்த தாக்குதலுக்கு இந்திய துணை ராணுவ பிரிவைச் சேர்ந்த வீரர்கள் 44 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இதனைத் தான் பாரதிய ஜனதா கட்சியின் தலைமைப் தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டதாக பின்னாளில் மோடியின் நம்பிக்கைக்கு பாத்திரமான காஷ்மீர் மாநிலத்தின் கவர்னர் சத்யபால் மாலிக் பொது வெளியில் குற்றம் சாட்டி வருவதைக் காணலாம். ஆனாலும், மோடி மற்றும் அவரது சக அமைச்சர்கள் எந்த விதத்தில் முழுமையாக பதிலளிக்க மறுத்து விட்டதே நாம் தெளிவாக அவதானிக்க முடிகின்றது.

தற்போதைய நிலையில் மீண்டும் ஒரு தேசிய தேர்தலை வரும் 2024 ம் ஆண்டு சந்திக்க காத்திருக்கிறது. இந்த தேர்தல் கடந்த தசாப்தங்களில் நடந்த தேர்தல்களை விட மிகவும் வேறுபட்ட தேர்தலாக தேர்தல் வியூக வாகுப்பாளர்களால் கணிக்கப்பட்டுள்ளது. ஏனெனில், மோடி தலைமையிலான இந்து தேசிய சனாதன அரசியல் கட்சி மீண்டும் ஒரு முறை ஆட்சிக்கு வரும் சூழ்நிலையில் ஒட்டு மொத்த தேசமும் மாறி விட அதிகம் வாய்ப்புகள் உள்ளதை கண்டு அவர்கள் மிகுந்த அச்சத்திற்கு உள்ளாகி இருப்பதை நன்கு உணர முடிகிறது. எனவே தான், இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் உள்ள பிரதான மாநில கட்சிகள் தங்களுக்கிடையான அரசியல் கொள்கை மற்றும் கோட்பாடுகளை மறந்து விட்டு ஒருங்கிணைந்து தேர்தல் சந்தித்து முயற்சி செய்து வருவதையும் காணலாம். இது காரம், இந்த எதிர் கட்சியினரை ஒருங்கிணைப்பு செய்த கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை யாரும் ஏற்காத நிலையில் மூன்று கட்ட கூட்டங்களை அவர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடத்தியிருப்பதை நாம் மிகவும் முக்கியமான காரணியாக எடுத்து கொள்ள வேண்டும். ஏனெனில், மோடி என்கிற ஒற்றை தலைமைக்கு எதிராக இந்தியாவில் தகுதியான தலைவரே இல்லை என்கிற நிலையில் மீண்டும் இந்து தேசிய சனாதன கட்சி ஆட்சிக்கு வருவதைக் தடுத்து நிறுத்தும் சக்தியாகவும் இவர்கள் மாறி வருவதைக் நாம் காணலாம். இருப்பினும் , இன்னும் 2024 ம் ஆண்டு ஒருங்கிணைந்த தேசிய தேர்தலுக்கு மிகவும் குறைவான காலமே இருக்கும் நிலையில் இவர்கள் அனைவரும் இணைந்து போட்டியிட்டு வெற்றி பெறுவது சாத்தியமான ஒன்று என்கிற பார்வையும் நாம் முற்றிலும் புறந்தள்ளி விட முடியாத உண்மையாகும்.ஆனாலும் , ஒருங்கிணைந்த எதிர் கட்சியினரை முன்னெடுத்து செல்லுகிற பணியில் காங்கிரஸ் கட்சி ஈடுபட்டு வருவதைக் நாம் காணலாம். காங்கிரஸ் கட்சியின் இளம் தலைவர் ராகுல் காந்தி இந்து தேசிய சனாதன அரசியலுக்கு எதிராக மாறுபட்ட அரசியலை அவர் கையில் எடுத்து செல்வது முக்கியமாக மோடிக்கு பின்னடைவை ஏற்படுத்தும் என்பதே பலரின் பார்வையாக உள்ளது . ஆனாலும் , ஒன்றுபட்ட எதிர் கட்சியின் கூட்டணிக்கு இந்தியா கூட்டணி என்று அவர்கள் பெயரிட்டுள்ளனர். INDIA ( Indian National developmenta Inclusive alience ) . இந்த பெயர் மாற்றம் உண்மையில் பாரதிய ஜனதா கட்சியின் உள்வட்டாரங்களில் மிகுந்த அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன

அதே சமயம் எதிர் கட்சியினர் ஒருங்கிணைந்து "இந்தியா " என்று பெயரிடப்பட்ட கூட்டணி பல்வேறு தடைகளையும் தாண்டி வர வேண்டிய கடுமையான சூழ்நிலை இருப்பதை நாம் கவனிக்க முடிகிறது. ஏனெனில், மாறுபட்ட கொள்கையை ஏற்றுக் கொண்ட அனைத்து அரசியல் கட்சிகளும் விட்டு கொடுத்து, இடங்களைப் முறைப்படி பங்கீடு செய்து சமாதானமாக பயணிப்பார்களா என்கிற கேள்வியும் எழுகிறது . ஏனெனில் , வருகின்ற 2024 ம் ஆண்டு நடைபெறும் தேசிய அளவிலான தேர்தலுக்கு முன்பாக 5 இந்திய மாநிலங்களில் தேர்தல்கள் நடைபெற உள்ளது.இதனை அரசியல் அவதானிகள் மினி நாடாளுமன்ற தேர்தலாக உற்று நோக்கி வருகின்றனர்.

அடுத்த வாரம் தொடரும்...

# அரையிறுதியை நோக்கி முன்னேறும் அணிகள்!



அப்ரித் வஸீர்

13 ஆவது உலகக் கிண்ணத் தொடர் இந்தியாவில் கடந்த 5 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.மொத்தம் 48 போட்டிகளைக் கொண்ட தொடராக இது அமைந்துள்ளது.இதுவரையில் 18 போட்டிகள் நடைபெற்றுள்ளன.(கட்டுரையை வாசிக்கும் போது எண்ணிக்கை மாறியிருக்கும்)இதன்படி நியூசிலாந்து ,தென்னாபிரிக்கா, இந்தியா,அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் மற்றும் இங்கிலாந்து அணிகள் விளையாடிய இரண்டு போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளது. அதனடிப்படையில்,

அட்டவணையில் நியூசிலாந்து முதலாமிடம்,இந்தியா இரண்டாவது ,தென்னாபிரிக்கா மூன்றாவது மற்றும் அவுஸ்திரேலியா நான்காவது இடத்தையும் ,பாகிஸ்தான் ஐந்தாவது இடத்தையும் பிடித்துள்ளது. அடுத்தடுத்த போட்டிகளின் வெற்றி -தோல்விகளை வைத்தே புள்ளி அட்டவணை நிர்ணயிக் கப்படும். எனினும் இந்தத் தொடர் மிக விரு விருப்பாக நடை பெற்றுக் கொண்டிருக் கின்றதை கிரிக்கெட் இரசிகர்களின் ஆர்வத்தை




காணமுடிகின்றது.

முதலாவது போட்டி: நடப்புச் செம்பியன் இங்கிலாந்து மற்றும் நியூசிலாந்து அணிகள் மோதின.இதில் நியூசிலாந்து அணி 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றன.

இரண்டாவது போட்டி: பாகிஸ்தான் மற்றும் நெதர்லாந்து அணிகள் மோதின.இதில் பாகிஸ்தான் அணி 81 ஓட்டங்களால் வெற்றி பெற்றன.

மூன்றாவது போட்டியில் ஆப்கானிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் அணிகள் மோதின. இதில் பங்களாதேஷ் அணி ஆறு விக்கட்டுகளினால் வெற்றி பெற்றன.

நான்காவது போட்டியில் தென்னாபிரிக்கா மற்றும் இலங்கை அணிகள் மோதின. இதில் தென்னாபிரிக்கா 102 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

ஐந்தாவது போட்டியில் அவுஸ்திரேலிய மற்றும் இந்திய அணிகள் மோதின. இதில் இந்திய ஆறு விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றது.

ஆறாவது போட்டியில் நியூசிலாந்து மற்றும் நெதர்லாந்து அணிகள் மோதின. இதில் நியூசிலாந்து அணி 99 ஓட்டங்களினால் வெற்றி பெற்றன.

ஏழாவது போட்டியில் இங்கிலாந்து மற்றும் பங்களாதேஷ் அணிகள் மோதின. இதில் இங்கிலாந்து அணி 137 ஓட்டங்களால் வெற்றி பெற்றன.

எட்டாவது போட்டியில் இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகள் மோதின .இதில் பாகிஸ்தான் அணி ஆறு விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றன.

ஒன்பதாவது போட்டியில் ஆப்கானிஸ்தான் மற்றும் இந்திய அணிகள் மோதின .இதில் இந்திய அணி எட்டு விக்கட்டுகளினால் வெற்றி பெற்றன.

பத்தாவது போட்டியில் தென்னாப்பிரிக்கா மற்றும் அவேஸ்திரேலியா அணிகள் மோதின .இதில் தென்னாபிரிக்கா அணி 134 ஓட்டங்களால் வெற்றி பெற்றன.

பதினோராவது போட்டியில் பங்களாதேஷ் மற்றும் நியூசிலாந்து அணிகள் மோதின .இதில் நியூசிலாந்து அணி எட்டு விக்கெட்டுகளால் வெற்றி பெற்றன.

பன்னிரண்டாவது போட்டியில் இந்திய மற்றும் பாகிஸ்தான் அணிகள் மோதின. இதில் இந்திய அணி 7 விக்கட்டுகளால் வெற்றி பெற்றன.

13ம் போட்டியில் ஆப்கானிஸ்தான் மற்றும் இங்கிலாந்து அணிகள் மோதின.இதில் ஆப்கானிஸ்தான் அணி 69 ஓட்டங்களினால் வெற்றி பெற்றன.

14-ம் போட்டியில் இலங்கை மற்றும் அவுஸ்திரேலியா அணிகள் மோதின. இதில் அவுஸ்திரேலியா அணி ஐந்து விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றன.

பதினைந்தாம் போட்டியில் நெதர்லாந்து மற்றும் தென்னாபிரிக்கா அணிகள் மோதின. இதில் நெதர்லாந்து அணி 38 ஓட்டங்களால் வெற்றி பெற்றன.

பதினாறாம் போட்டியில் நியூசிலாந்து மற்றும் ஆப்கான் அணிகள் மோதின .இதில் நியூசிலாந்து அணி 149 ஓட்டங்களால் வெற்றி பெற்றன.

17 ஆம் போட்டியில் பங்களாதேஷ் மற்றும் இந்திய அணிகள் மோதின .இதில் இந்தியா அணி 7 விக்கட்டுக்களால் வெற்றி பெற்றன.

பதினெட்டாம் போட்டியில் அவுஸ்திரேலியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் மோதின. இதில் அவுஸ்திரேலியா அணி 62 ஓட்டங்களால் வெற்றி பெற்றன.

இதுவரை நடைபெற்ற போட்டிகளின் படி அட்டவணையில் நியூசிலாந்து அணி முதலாவது இடத்திலும், இந்திய அணி இரண்டாவதும், மூன்றாவது இடத்தில் தென்னாபிரிக்காவும் ,நான்காவது இடத்தில் அவுஸ்திரேலியாவும், ஐந்தாவது இடத்தில் பாகிஸ்தான் மற்றும் ஆறாவது இடத்தில் இங்கிலாந்து அணிகள் இடம்

பிடித்துள்ளன.அடுத்தடுத்த போட்டிகளின் புள்ளி விவரங்களின் அடிப்படையிலேயே இந்த தரவரிசை பட்டியல் நிர்ணயிக்கப்படுகிறது.




இலங்கை அணி இதுவரையில் மூன்று போட்டிகளில் விளையாடி மூன்றிலும் தோல்வியை தழுவியுள்ளது. இதனால் அட்டவணையில் கடைசியில் உள்ளது .இலங்கை அணி அரையிறுதிக்கு செல்வதற்கான வாய்ப்பு மிக குறைவாகவே உள்ளது .பொறுத்திருந்து பார்ப்போம் ,இனிவரும் ஆறு போட்டிகளில் இலங்கை அணி பாரிய ஓட்ட வித்தியாசத்தில் வெற்றி பெற்றால் மாத்திரம் தான் அரை இறுதிக் கனவை நனவாக்க முடியும்.இலங்கை அணியின் தொடர் மோசமான தோல்விகளினால் இலங்கை அணியின் இரசிகர்கள் மிகவும் கவலையடைந்துள்ளதை சமூக வலைத்தள பதிவுகளின் மூலம் காணமுடிகின்றது.

இந்தத் தொடரில் அதிகூடிய விக்கெட்டுக்கள் எடுத்தவர்கள் தரவரிசையில்,

1.நியூசிலாந்து அணியின் சன்ட்னர் 11 விக்கெட்டுக்கள்.

2.இந்திய அணியின் பும்ராஹ் 10 விக்கெட்டுக்கள்.

3.நியூசிலாந்து அணியின் ஹென்றி 9 விக்கெட்டுக்கள்.

4.பாகிஸ்தான் அணியின் ஷஹீன் அப்றிடி 9 விக்கெட்டுக்கள்.

5.அவுஸ்திரேலியா அணியின் அடம் ஸம்பா 9 விக்கெட்டுக்கள்.

6. பாகிஸ்தான் அணியின் ஹரீஸ் ரவூப் 8 விக்கெட்டுக்களுடனும் தரவரிசையில் உள்ளனர்.

இந்தத் தொடரில் அதிகூடிய ஓட்டங்களை பெற்றவர்கள் தரவரிசையில்,

பாகிஸ்தான் அணியின் முஹம்மத் ரிஸ்வான் 294 ஓட்டங்களுடன் முதலாமிடம்.

இந்திய அணியின் ரோஹித் சர்மா 265 ஓட்டங்களுடன் இரண்டாவது இடத்திலும்.

இந்திய அணியின் விராட் கோலி 259 ஓட்டங்களுடன் மூன்றாவது இடத்திலும்.

நியூசிலாந்து அணியின் கொன்வே 249 ஓட்டங்களுடன் நான்காவது இடத்திலும்.

தென்னாபிரிக்கா அணியின் டி கொக் 229 ஓட்டங்களுடன் ஐந்தாவது இடத்திலும்.

அவுஸ்திரேலியா அணியின் வோர்னர் 228 ஓட்டங்களுடன் ஆறாவது இடத்தையும் பிடித்துள்ளனர்.

ஒரு அணிக்கு மொத்தமாக 9 போட்டிகள் உள்ளன.அதில் 7 போட்டிகளில் வெற்றி பெறுகின்ற அணிகள் பெறுகின்ற புள்ளியின் அடிப்படையில் அரையிறுதிக்கு தகுதிபெறுவார்கள்.

இப் பத்திரிகை 15.10.2023 அன்று மாஸ்டர் பிரிண்டர்ஸ் நிறுவனத்தினால் 78/1, டயஸ் பிளேஸ் கொழும்பு 12 எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.